311

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞான ஸ்தவாம்ருதம்.

இஃது

சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திற்றுத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச

சபாப்ரசங்க கோளரியும்

சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை

அநட்கவி

இ. வ. பா. கங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள

"சிவஞானப்பரதேசியாரென்னும்"

சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்

இயற்றப்பட்டு

கையோப்பக்காரர்கள் நன்முயற்சியினுல் தமது

சென்னை சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெயவிநாயக சிவப்ரகாச் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

39-வது ஹூத்தின் திருப்பணியாக கலியுகாப்தம் 5019க்குச்

சரியான காளயுக்திஹூ பங்குனிமீ 1உ

சுவாமிசந்நிதியில் தேசிக சுவாமிகளால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1919ஹூ மார்ச்மீ 14உ

---

22 JUL

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞான ஸத்வாம்ருதம்.

இஃது

சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வேதாந்த சித்தாந்த ஸமரச சுக்ஞான விலாச

சபாப்ரசங்க கோளரியும்

சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை

அருட்கவி

கி. ஊ. பா. கங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள

“சிவஞானப்பரதேசியாரென்னும்”

சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்

இயற்றப்பட்டு

கையோப்பக்காரர்கள் நன்முயற்சியினால் தமது

சென்னை சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெயவிநாயக சிவப்ரகாச் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

39-வது ஞூத்தின் திருப்பணியாக கலியுகாப்தம் 5019க்குச்

சரியான காளயுக்தி ஞூ பங்குனி மீ 1உ

சுவாமிசந்நதியில் தேசிக சுவாமிகளால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1919 ஞூ மார்ச் மீ 14உ

OFFICE OF THE ... 22 JUL 19... MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

OFFICE OF THE REGISTRAR OF ...
22 JUL 1919
MADRAS.

சென்னைத் திருமயிலை.

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞானஸத்வாம்ருதம்.

விநாயகர் வணக்கம்.

பஞ்சரத்தினம்.

சோடசச்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் - நட்டராகம்.

மணிநிலவு மதீதகுண வள்ளலே சுஷ்கிதனே
மறைசுருதி தேவரயன் மாலிந்திரர் முதலும்
மன்னுபுக ழிருடியரு மெய்யடியர் ஞான்றும்
வணங்கிமுடி சாய்த்துகரஞ் சிரமேற்குவித் தேத்தி
திணிநிலவுந் திருநீறப் பூசியக்க மணிந்து
சிவயநம சிவகணேச ஹரவோம்சிவ வெனவே
சிந்தையொன்று மைந்தெழுத்தாம் பஞ்சாக்கர மதனை
செபித்தூழ்வினை யவித்துவரம் பெறவே கடைக்கணித்து
பணிநிலவும் நலம்பணித்த பரனே விக்நேச்சுரனே
பலகோடி படைப்பனைத்து ணிலவும் பிரணவனே!
பார்வதி சங்கரியுமையாள் பைரவி காமாட்சி
பகரரிய சத்திசிவ காமிமஞ்சை வடிவாய்

அணிநிலவு முருகரந்த மயிலை கபாலீச
வண்ணல்மிசை சிவஞானஸத் வாம்ருதநூ லிசைக்க
அருடருமோம் விகடதட கும்பவிநா யகனே
அரஹரவோம் சிவசிவவோ மமலனே நின் சரணே. (க)

புகழ்மலியும் புனிததவப் புண்ணியர்க ளுளம்வாழ்
பூசுரனே கருணைநிறைப் புங்கமே மாசில்லாப்
பூரணமே காரண காரியங்கடந்தோர் நிலையிற்
பொருந்திஞான மருந்திநெறி திருந்தயிருந் திடுமெய்த்
திகழுமஹா னியர்களந்த ரங்கசேவை யதனிற்
சேவைசெய்து கண்டுகளித் திடுமேகத்வ வொளியே
தேடுதற்கு நாடுதற்கும் பாடுதற்கு முரியச்
செல்வமெனுங் கல்விதருந் தேவேதந்தி முகனே
சுகதுக்க மிவையிரண்டு மெவ்வெவ்வவ தரத்துந்
தோன்றாத வுள்ளமதிற் றோன்றுங் கணபதியே
துய்யகுண மெய்யடியா ரன்றிமற் றவருந்
துரியாதீத சுழுச்சியுண்மை சொல்லவல்லா ரெவர்காண் ?
அகங்களிக்க தேவர்தொழு மயிலை கபாலீச
வண்ணல்மிசை சிவஞானஸத் வாம்ருதநூ லிசைக்க
அருடருமோம் விகடதட கும்ப விநாயகனே
அரஹரவோம் சிவசிவவோ மமலனே நின் சரணே. (உ)

சோதிசுகா ரம்பஞானத் தோற்றமே சாஸ்விதமே
தொந்தபந்த நிந்தையிலாச் சுத்தமனோ லயமே
தூரமுஞ் சமீபமுமாய் சொல்லுஞ்சொல்லின் றொடர்புஞ்
சொந்தமெனுஞ் சொச்சொருப சுகசொருப மிவைக்கு
ணீதிபடி மறைசுருதி பெத்தரு முத்தர்களு
ணிறைந்துநட்ட மதுபுரியு நின்மலனே ஸ்வயம்பே
நேசமிகும் பூசனையு பாசனையும் வழுவா
நெறியுடனே வரியகுண நீடுமன்பர்க் குறவே
பூதியணிந் தேதொழும்பு செயுநலோர்க ளென்றும்
போற்றபுகழ் சாற்றமலர்த் தூற்றகடைக் கணித்த
புரந்தரனே நிரந்தரனே சருவசாட் சியனே
புத்திநடு மத்தியினி லொத்தசித்த முதலே
ஆதியந்த மத்யமிலா மயிலை கபாலீச
வண்ணல்மிசை சிவஞானஸத்வாம்ருத நூலிசைக்க

அருடருமோம் விகடதட தும்ப விநாயகனே
அரஹரவோம் சிவசிவவோ மலலனேநின் சரணே. (௩)

பூதல மெலாம்பரவி போற்றபல வடிவம்
பொருந்திநின்ற வுளவறிந்துப் புகல்வதெளி தலவே?
பொன்னதனை மண்ணதற்கு ளடேக்குமனு பவம்போற்
பொய்யகன்ற மெய்யருளம் புகுந்தொளிரும் பரமே
சாதனைக ளனுநான்கின் வழிசிறிது வழுவா
சன்மார்க்க சைவநிலை சார்ந்தவரே சனனச்
சர்கரத்தைத் தாண்டினர்கள் தாண்டுவர் முக்காலுஞ்
சத்தியமா மெனவுமைக்கு சங்கரனன் றுரைத்த
போதனையுட் சாரபஞ்சாக் கரத்தினதி ரகஸ்யம்
புகன்றவந்நா ளெதிரில்வந்து நடித்த கேதாரப்
போதவழ கதையாசித்து செவிமடுக்குஞ் சீரைப்
போக்கியதா லவ்வுருவாய்ப் போற்றுமுமை லிங்கம்
ஆதவன்போற் சுடர்க்கொள்திரு மயிலை கபாலீச
வண்ணல்மிசை சிவஞான ஸத்வாம்ருத நூலிரைக்க
அருடருமோம் விகடதட தும்பவிநா யகனே
அரஹரவோம் சிவசிவமோ மமலனேநின் சரணே. (௪)

சிற்பரதற் பரவடிவே செழுங்குண ரஞ்சிதமே
சித்திபுத்தி யளித்துபத்தி முத்திதரு பவனே
தின்னதின்னத் திகட்டாதத் தீங்கனியே மதுரத்
தேனேசெங் கரும்பெனவே வடியருடித்திக்கும்
விற்பனநற் கலையேகலை கண்ணேகண் ணுளொளியாய்
விளங்குபவா களங்கமிலா மேலோர்தவ நவமே
வேதாந்த சித்தாந்த வேற்றுமைக ளெண்ணு
விழுமியர்க ளேத்தவரு ஓமங்காப் பிரணவமே!
கற்பனை யெலாங்கடந்த பெரியோருரைப் பிழம்பே
கணபதியே குணநிதியாய்க் கலந்த பெருமானே
கருத்தறிந்து வுருத்தெரிந்து பொருத்தமுற நிருத்தங்
கண்டவர்க்குண் டானந்தங் கயவனெங்ங னுணர்வேன்?
அற்புதமா யிலகுதிரு மயிலை கபாலீச
வண்ணல்மிசை சிவஞானஸத் வாம்ருத நூலிசைக்க
அருடருமோம் விகடதட தும்பவிநா யகனே
அரஹரவோம் சிவசிவமோ மமலனேநின் சரணே. (௫)

நாமாவளி.

(க) சித்தி விநாயகனின் சீர்ப்பதமே
சிவஞான ஸத்வாம் ருதயிதமே; ஓம் (சித்தி)

(உ) சத்தியஞ் சாந்தஞ் சதோதயமே
சமஸ்த ஜீவாதார சாட்சியமே; ஓம் (சித்தி)

(ங) தேவி பஞ்சாக்கர வாக்கியமே
பாவா தீதங்கடந்த பாக்கியமே; ஓம் (சித்தி)

(ச) சுத்த சாதாக்கிய சௌமியமே
சித்தத் தொளிருகின்ற சிவமயமே; ஓம் (சித்தி)

(ரு) மயிலையை வலம்வந்து சூழ்வாரே
கயிலாய மிதுவென வாழ்வாரே; ஓம் (சித்தி)

(சு) தவப்பிர காசமென்றுங் கைக்கூடும்
சிவப்பிர காச தேசிகன் பாடும்; ஓம் (சித்தி)

—§—

நூல்.

அருள்வேண்டுஞ் சோடசமாலை.

பண் - இந்தளம்.

அருளே பழுத் தொழுகுஞான வமலா பரம நிமலா
தெருளே வுண்மைத் தெளிந்தார் தினஞ் சேவிக்குஞ் சங்கரனே
பெருமானே நின் பெருமைதனைப் பேசும்வகை யறியேன்
கருணீகனே மயிலைகபாலீச் சுரனே கடையேற் கருளே. (க)

அண்ணா யெந்தனப்பா யேழைக் கரசே யாப்தருறவே
எண்ணா யெழுத் ததுவா யிலக்கணமா யிலட்சணமாய்
மண்ணா யுயர் வீண்ணாய்த் தவமதுவாய் நிறை வள்ளலே
கண்ணாய்நிறை மயிலைகபாலீச் சுரனே கடையேற் கருளே (உ)

பொருத்தமுட னெழுத்தைந்தினைப் புகன்று வெண்ணீ றணிந்து
அருத்தா பத்தியுடனே தொழு மடியார் மிடியகற்றி
நிருத்தஞ் செயுஞ் சிவமே தெய்வ நிலையே சர்வகலையே
கருத்தாவெனு மயிலைகபாலீச் சுரனே கடையேற் கருளே. (ங)

அமரர்களு மடியார்களு மஞ்சலிச் செய்திடவே
தமனியமாஞ் சுடர்போல் வீதி சாரிவருஞ் சம்புவே யோர்
நிமைநேரமு மறவாப்படி நிட்டை புரிதவத்திற்
கமழுந் தேவே மயிலைகபாலீச் சுரனே கடையேற் கருளே. (௪)

பூதமைந்தின் வழிசிக்கிநாட் போக்கிமன வாளாக்கி
பாதகபொய் மயலான்வினைப் பற்றி நன்மை யகற்றி
வாதையுறும் படிவிட்டிடின் மயங்கித் தளர்ந்திடுவேன்
காதன்மிகு மயிலைகபாலீச் சுரனே கடையேற் கருளே. (௫)

அனியாயமர யுடலையழித் திடற்கோ வவதரித்தேன்
சனியாமலுஞ் சனியால் துயர்ச் சாராமல் முன்தடுத்தா
லெனையீன்றிட விவணேங்கிட யிருப்பதிலை யடியார்க்
கனிவாய்த்தொழு மயிலைகபாலீச் சுரனே கடையேற் கருளே ()

மலைவுபடு மனச்சேட்டையால் மதியே சிதறிடவு
நிலையற்றதை நிலையா யெண்ணி நியமநெறி யகன்றாழ்த்
தலைமைப்படா துனதுத்திருத் தாளைத் துதித்திடு மெய்க்
கலைதந்தருண் மயிலை கபாலீச் சுரனே கடையேற் கருளே. (௭)

பதமேச்சதாப் பரவிபணிந்தேத்திப் பாடியாடி
யிதயத்தினி லுருகண்டுகொண் டென்று மொருபடித்தா
யுதயத்தொளிர் பொருட்போ டன்பு யுவக்க நலம்பணித்து
கதிதந்திடு மயிலை கபாலீச் சுரனே கடையேற் கருளே. (௮)

முற்றுந் துறந்தவரியார் மோக முளையை யெரிந்தவரியார்
பற்றென்பதற் றவரியார் யோகப் பருதியிற் கூடினதார்
சற்றுய்ந்திடி லனைத்து முன்றன் சார்பாக நிற்பதெனக்
கற்றூர்த்தொழு மயிலை கபாலீச் சுரனே கடையேற் கருளே. (௯)

ஆரணநெறி யகலாதெவ ரகன்றூரெவ ரன்பரிலே
பூரணானந்த மெனவே யெங்கும் பொருந்தி விளையாட்டாகத்
தாரணியுள ஜீவராசியைத் தானூட்டுஞ் சதோதயனே
காரணா திரு மயிலைகபாலீச் சுரனே கடையேற் கருளே. (௰)

மனமோய்ந்தொரு நிலையிற் றங்கி மதியா லுருதெரிந்து
அனலிற்படும் பொருளானது அழியுந் திறமதைப்போல்
வினையாவையு மெரித்து ஞான மேலாம்பதி வாழ்வதெனாட்
கனகமென மயிலை கபாலீச் சுரனே கடையேற் கருளே. (௰௧)

உடற்கு ளுளவுயி ரானதா லுள்ள மகிமையெலாங்
திடனுற்றிடுஞ் சிவமே மாய சீவனு யமைந்திருக்க
கடன்பட்டதே கடமாய் வரக் கண்டு தொண்டுசெயு நற்
கடமைதரு மயிலை கபாலீச் சுரனே கடையேற் கருளே. (௰௨)

பொல்லாச் செய லுடையப்புலா லெலும்பைப் பொருந்தினதே
யல்லாற்சிறி தேனுநன்மை யறியே னலக்கழித்தால்
தொல்லையினு லழிவே னந்நா டுணையார்ப் பரசிவமே
கல்லேனையாள் மயிலை கபாலீச் சுரனே கடையேற் கருளே. (௰௩)

சகளமேனி யுடையாய்சிவ சம்போ சதாசிவமே
புகலும்பல வேதந்தனுட் பொருளாய் நிறையரனே
புகழாய்ந்தநற் பெரியோர்ஞான் றும் போற்றுஞ் சந்திரமௌலி
ககனம்பணி மயிலை கபாலீச் சுரனே கடையேற் கருளே. (௰௪)

நஞ்சாம்வினைப் பாம்பான்மிக நடுங்கி யெண்ண மொடுங்கி
வஞ்சனையாம் பேயாலுனை மறந்தேன் வீணே பறந்தேன்
தஞ்சமென வடுத்தோரையாள் சங்கரா தயாநிதியே
கஞ்சன்றொழு மயிலை கபாலீச் சுரனே கடையேற் கருளே. (௰௫)

பார்க்கு ளுன்றா ளன்றித்துணை பாபிக் கிலையையனே
மூர்க்கமுள வினைநீக்கிலிம் மூடன் பிழைத்திடுவேன்
சீர்க்கொண்ட மெய் யடியாருடன் சேவை தரவந்து
கார்க்குந்திரு மயிலை கபாலீச் சுரனே கடையேற்கருளே. (௰௬)

சிவமாணிக்கச் செழுமணிமாலை.

பஞ்சதுணித கோச்சகக்கலிப்பா.

மன்னுகின்ற புகழ்மருவு மாதவமே வள்ளலென
நன்மையெல்லாந் தரவருகு நாயகனே தாயகனே
புன்புலா னிறையுடலிற் புகுந்துபல நடம்புரியுஞ்
சின்மயனே கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௧)

அரும்பொருளே ஆரணமே அனைத்தையுமிங் காட்டுவிக்கும்
பெரும்பொருளே பெம்மானே பேய்மனதை யடக்கினர்முன்
வரும்பொருளே மாண்புயரு மாமதியே கங்கையனே
தெருட்பொருளே கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௨)

வானவருந் தானவரும் வாழ்கவுயி ராய்மலரு
டானிறையும் வாசமென சலமதிலே சீதமென
ஊனிறையு முடலதற்கு ளோகோ புகுந்தாட்டுவித்து
தீனனையாட் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௩)

பொடியெனூஉந் திருநீறு பூசிபுகழ் பேசிதொழு
மடியவர்க்கு வடிமைசெயு மருளிலையே லிருவினையுண்
மடிவதல்லா னுண்மைநிலை வாய்ந்திடாம லலக்கழியுஞ்
செடியனுள்வாழ் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௪)

ஒப்புயர்வில் லாதவனே வுடற்குளே வுயிராகி
மெய்ப்படவே கண்டவரே விளங்குஞ்சீவன்முத்தர்களே
பொய்க்கடையில் வினைசரக்கைப் பொசித்துயிவ ணசித்தலெது?
தெய்வீகமாங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௫)

ஆகமமும் புராணமுத லளவுபடா சுருதிகளு
மேகமென்றே பேசவபோ லிறையவனே வுயிர்க்குளெலாம்
மோகம்பல யோகமுத்தி முடிவாகக் கலந்தயின
தேகத்துள்வாழ் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே: (௬)

அரியவனு மறிந்தவனு மாணுடன்பெண் ணலியெனவே
உரியபல வுருகரந்து வுள்ளும்புறம் பொன்றாகி
கரியாகுஞ் சாட்சியமாய்க் கலந்துவினை யாடல்செயுந்
தெரிவரிய கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௭)

அங்குமிங்கு மெனப்புகலு மவ்வுலகு மிவ்வுலகு
மெங்குமொன்று யமைந்திருக்கு மேகநிலைக் காண்பதெந்நாள்?
தங்குகின்ற வுளவறிந்து சாகாத மெய்யடியர்த்
திங்களெனுங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௮)

ஆட்டுகின்றா யாடுகின்றோ மடக்குகின்றா யடங்குகின்றோம்
ஓட்டுகின்றா யோடுகின்றோ முலவுகின்றா யுலவுகின்றோம்
நாட்டுகின்றாய் நாடுகின்றோம் நவிலுயிர்ப்பந் தாகயெண்ணி
தேட்டஞ்செயுங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௯)

பேசுகின்றாய்ப் பேசுகின்றோம் பிணங்குகின்றாய்ப் பிணங்குகின்
ஏசுகின்றா யேசுகின்றோ மிறக்கின்றா யிறக்கின்றோம் [றோம்
கூசுகின்றாய்க் கூசுகின்றோங் குணந்தந்தே யாதரிக்குந்
தேசுயருங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰)

எல்லாமா யெவ்வுயிர்க்கு மிறையவனு யிருந்துகொண்டு
வல்லாண்மை செய்கின்ற வலிமையெவர்க் கண்டுணர்வார் ?
சொல்லாத வொருமொழியிற் சோகமுற்றுற் சாகாத
செல்வமெனுங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௧)

போகியென வுட்புகுந்து பொருந்துமன நிலைப்படியே
மோகியுமாய் மூத்தனுமாய் மூடனுமாய் சீடனுமாய்
யோகியுமாய் யூகியுமா யூனதற்கு ளொளித்துநின்று
தேகியுமாங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௨)

ஒத்தவிடந் தனிற்புகுந்து வுள்ளதெலாந் தானுணர்ந்து
செத்தசவம் போனடந்து திறமொன்றுங் காட்டாதுன்
மத்தர்ப்பா லர்ப்பேயர் வடிவாகி மயக்கமற்று
சித்துசெயுங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௩)

சாணுதறகுங் கண்டபின்பு கைவிடற்கு முடியாத
மாணுகரும் பெரும்பயனை வலியகொடுத் தாட்கொண்டு
பூணுதற்கும் பூசுதற்கும் பொருந்துநலந் தருமுடற்குட்
சேணுலகாட் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௪)

அடுப்பதற்கும் வேறுன்றி லமர்வதற்கு மமர்ந்ததனைச்
கெடுப்பதற்குங் கேடகன்று கெஞ்சிதொழும் விஞ்சையாவுங்
கொடுப்பதற்குந் தடுப்பதற்குங் கூற்றனென வுயிரையுண்ணத்
தெடுப்பிக்குங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௫)

பாயும்புலி யெனவுஞ்சக்தி பலிதமிலா வுருவெனவுஞ்
சாயுநிலா வெனவும்பல சமத்வமுமாய் தழைத்துநின்று
ஆயுளதைக் கொள்ளைகொள்ள அண்டிநின்ற கொள்கையெல்லாந்
தேயுவிலாக் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௬)

கொண்டதுவுங் கொடுத்ததுவுங் கொடுக்காது தடுப்பதுவும்
அண்டினது மகன்றதுவு மாதரையின் வாதைகளை
யுண்டதுவு முடுத்தினது முடலழியக் கண்டதுவுந்
தெண்டமிடுங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௭)

சரியிரேரமெனப்பிறந்து சரீரமதைத் தானெடுத்துப்
பரிவின்றி நீரினிலே பதிந்திடா யெழுத்ததைப்போல்
வரியாகும் வினைக்கூலி வாங்கித்தின்று மடிந்திடொ
டெரிவரிய கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௮)

பத்தரென் றம் பாவனைகட் பாவித்து பற்றகன்ற
முத்தரென்றும் முனிவரென்று முறைகூறி முனிவகலா
சத்தனு விருவினையாந் தாள்பூட்டி மண்குழிக்குட்
சித்துசெயுங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௰௧)

தனைமறந்து வினையகன்று சத்தழியா சித்திபெற்று
நினைவகன்று நினைந்ததெலாம் நில்லாது மாய்வித்து
மனையகன்றும் மனையுகந்தும் மன்னனுமாய் வாணிபஞ்செய்து
தினைப்பயனுங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௨௰)

எட்டாத மலைத்தேனை யெடுத்துண்டு யிருப்பதற்குங்
கொட்டாவி விட்டுவிட்டு குந்தியழு தேங்குதற்கும்
பட்டாங்கு அடிப்பதற்கும் பாலுண்டுச் சாகாத
செட்டுசெயுங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௨௧)

துறப்பதற்குந் துறவாதத் தொல்லைபட வெல்லதின்றி
மறப்பதற்கும் மரிப்பதற்கும் மரணமின்றி வாழ்வதற்கும்
இறப்பதற்குங் கையேந்தி யெரியனலைத் தணிப்பதற்குஞ்
சிறப்பதர்குங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௨௨)

ஒளிக்கொளியா யுயிர்க்குயிரா யுற்பவமுங் கற்பனையாய்
களிப்புடனே துக்கமுமாய்க் காண்பதுவுங் காணாததுவாய்த்
துளிர்ப்பதுவு மழிவதுவுந் தொந்தமெலாஞ் சொந்தங்கொளுந்
தெளிவுதருங் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௨௩)

தத்துவமாய்ச் சாத்திரமாய் சாத்திரியாய்த் தானிருந்து
முத்தர்மன மிருக்குநிலை மோனமதாற் றனைமறந்து
சுத்தசதாக் கியஞானச் சுடர்க்கூண்டு சுகித்திருக்குஞ்
சித்தமருட் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௨௪)

பெருமயலைத் தாங்கியிவண் பிறந்ததிலே பிறவாது
கருமயலைத் தானகன்று கடத்தினுள்வாழ் கடவுளடிப்
பெருமயலைப் பெற்றிறவா பேரின்பந் தருங்கயிலைத்
திருமயிலைக் கபாலீச சிவமேசீவ மாணிக்கமே. (௨௫)

—]o[—

கீர்த்தனை.

இராகம் - நாதநாமக்கிரியை அடதாளசாப்பு

பல்லவி.

மாணிக்கங் கொடுப்பானே - நித்யானந்த - மாணிக்கங்கொடுப்பானே
சிவனும், சிவமாம், பிராணனும் - விலையிலா, மாணிக்கங்கொடுப்பானே
மஹேசன்-கயிலாச-மயிலைவாசன்-ஸ்ரீகபாலீசன்-பிறப்பிலா; (மா)

அநுபல்லவி.

காணிக்கையில் யுடற் - பொருளாவி தந்திட
கர்த்தன்பிர - சித்தன் - சுத்தமனந் - தங்கிட
தாணுவாய் சர்வமுந் தானே தானகிட
தத்வமசிமஹா - வாக்கியஞ் சிறந்திட; (மாணி)

சரணங்கள்.

(௧) ஐம்பூதக் கள்ளர்கள் - வம்பு வொழியவும்
சம்பிரம ஞான - தடாகத்துள் மூழ்கவும்
சதிசாப்பனை யவைநீங்கிட-விதியற்றுமெய் மதியோங்கிட; (மாணி)

(௨) சத்து சித்தானந்த - வித்தகமாம் பொருள்
பத்த ரகத்துறை - முத்தி வசப்பட
பனிரெண்டெனுங் கலையுட்பட - தனியாகியூழ் வினைகட்கெட (மாணி)

(௩) தத்துவ வாதனை - பித்தகன்றோடிட
மத்தர் பாலர்பேயர் - ஒத்து நிலைத்திட
மதகரிபோ லடித்துக்கொல்ல-மனச்சேட்டைக ளியாவையும் வெல்ல;

(௪) பூதி யணிந்துமெய் - சோதியைக் கண்டிட
சாதி போராட்டவீண் - பீதி யகன்றிட
சகலாகம சொரூபங்களே - சந்திரசடா தரனென்றுணர்; (மாணி)

(௫) தூய்ய நெறிகொண்டு - வுய்யும்படிக்கு நல்
சைவ சமயத்தின் - மெய்யொளி தோன்றிட
சமத்வஞானத் தடவரையிற்-றான்வாழ்ந்து சந்தோஷங்கொளும்; (மா)

(௬) ஆடி யலைதற்போல் - காடு காடு மலை
ஓடியோடி வாடி - வோடாண்டி யாகி
உண்ணலுக்கே இரவுபகல் - உழைத்தே தேகமிளைக்காமலே; (மாணி)

(எ) பொய்யருக்குப் பொய்யாய் - மெய்யருக்கு மெய்யாய்
ஐயன் குடிகொண்டு - ஆட்டி நிலைத்திடும்
அந்தரங்க மதவோர்ந்து - சிந்தனையும் பந்தமற; (மாணி)

(அ) வள்ளல் சிவன்கழல் - உள்ளத் திருத்திடின்
கொள்ளைக்கொள்ளு மேமை - வெள்ளங் கடந்திட
விதியோய்ந்திட நெறிநின்றிட - கதிதந்திடும் பதி சென்றிட; (மாணி)

(௯) அண்டபிண்ட மியாவும் - கொண்ட நீலகண்டன்
தொண்டு செய்தே ஞான - மூண்டு விண்டு கண்டு
துதிசெய்திட மலையாய்வந்த - நிதியாய்ந்துவுள் விழிபெற்றிடு; (மாணி)

(௰) மூவாசையால்வினை - பாவித்ததன் கன்ம
மேவி நலம்விட்டு - சீவன் கெடாப்படி
விஞ்சைமிகுஞ் செஞ்சேவடி - தஞ்சமென விஞ்சும்படி; (மாணி)

(௰௧) பத்தருடனொரு - மித்து மித்தையற்று
எத்தவரும் வேண்டா - சித்தமொடுங்கியே
சீர்பெற்றுயர் வாழ்வுற்றிடு - கேருற்றுநல் பேர் பெற்றிடு; (மாணி)

(௰௨) மன்றுட் சிவகனி - தின்று பசியற்று
என்று மழிவில்லா - நின்ற நிலைதன்னுள்
நியமமியமமு நீங்கிட - நெறிகொண்டன்பு தனில் மூழ்கிட; (மாணி)

(௰௩) ஆகமம் கைவிட்டவி - வேகர்போ லாகாமல்
தேகமுள்ளப் போழ்தே - யோக போகங்காண
யூகமனு பவங்கைவர - வுண்மை நித்திய மதனைப்பெற; (மாணி)

(௰௪) என்று மிருப்போமென் - றுன்னி மயங்காது
ஒன்ப தடைத்ததில் - மன்னு முயிரைக்கண்
டுல்லாசமாய் சுழுச்சிதனில் - சல்லாபமாய்த் தான்வாழ்ந்திடு; (மாணி)

(௰௫) தான தவம்சிவ - ஞான மான தான
மோன நெறிகொண்டு - யீனவழி வென்று
முத்தியெனு முதிருஞ்சுவை - பத்தியினு னத்தியுண்ண; (மாணி)

(௰௬) கேடனைத்து நீக்கி - வீடுதராத பொய்
வேடம் பலப்பூண்டு - ஆடல் படாமலே
வினையாம்பனைத் தினையாய்விட - மனமோய்ந்துபல் நினைவற்றிட; ()

(௰௭) காலைமாலை யுச்சி - சால பூசையில்லா
மூலமதைக் கண்டு - தாலமயலற
சமஸ்தவுருத் தாமாகவே - தானுற்றிடு நிலையோங்கவே; (மாணி)

(௰அ) மாட்சிமையாகிய - சூட்ச தற்போதத்தின்
சாட்சி மாத்திரைபோல் – காட்சி தனைப்பார்த்து
சமரசநன் னெறிகற்றுசீ - ரமரர்ப்பதி யதில் வீற்றிட; (மாணி)

(௰௯) கள்ள மனச்செயல் - துள்ளியோடி மாய
உள்ளங் கோயிலாக - வள்ளல் வந்துத் தங்க
மாசற்றமெய் மணிபூரக - நேசமுற்று சுகமுற்றிட; (மாணி)

(௨௰) எண்ணு மெழுத்தது - அண்ண லுருவென
கண்ணை மனக்கண்ணாய் - பண்ணிப் பயன்பெற
கருத்தானது சிதையாமலே - காலன் றன்னால் வதையாமலே; (மாணி)

(௨௧) மூவாசை நீடிக்கும் - பாவிசைத்தேங்காமல்
தேவ சிவன்கழல் - சேவை செய்யும்படி
சித்திபுத்தி யதுநீடவும் - தெய்வத் தொண்ட ரிடங்கூடவும்; (மாணி)

(௨௨) எப்பொரு ளென்கினும் - அப்பொருள் தன்னுளே
மெய்ப்பொருட் கண்டிட - கைப்பொருண் வேண்டாது
விற்பனநற் கலைகற்றிட - அற்பர்களி னுறவற்றிட; (மாணி)

(௨௩) ஆதரையிற்பல - பேத போத்கத்தின்
வேதநாதமோர்ந்து – சாதனை யோங்கிடு
மெய்யின்னது யெனத்தேர்ந்திட - சையோகமற் றுயர்வாழ்வுற; (மா)

(௨௪) சன்மக் கடலெனும் - துன்பமதைத்தாண்டி
மன்னு ஞானப்பாலை - மாந்திசதாவேண்டி
மாதவங்கள் வேண்டாது - மயக்கவழியில் தூண்டாது; (மாணி)

(௨௫) நித்தியானந்த - நிரதிசயானந்தஞ்
சித்தியாகும்வரை – பத்தி கைவிடாது
உத்தமசற் குருபாதம் - நத்தித்தொழு திருக்கும் விதம்; (மாணி)

(௨௬) அல்லும் பகலுநம் - வல்ல சிவபிரான்
நல்ல புகழ்தன்னைச் - சொல்லி மகிழவும்
எல்லையிலாச் சுகம் வரவும் - ஈஸ்வரி அமுதந்தரவும்; (மாணி)

(௨௭) கெட்டுப்போகவரும் - சொட்டு புத்தியுள்ள
துட்டப் பாபிகணேசம் - கிட்டவராப்படி
தூரத்தனியே யிருக்க - சாரமற்ற தைத்வெறுக்க; (மாணி)

(௨அ) இருந்தயிடத்தில் - வருந்தித் தொழுதசீர்ப்
பொருந்து நிலைக்கொண்டு - திருந்த யிருந்திடும்
புண்ணிய மென்பதுகூட - எண்ணரிய வரநீட; (மாணி)

(உக) எட்டிப் பார்த்தவீட்டைக் - குட்டிச் சுவராக்கும்
மட்டிகளைவரை - யெட்டிப் பார்க்காமலே
மாசற்றநற் குணம்வந்திட - தேசுற்றமெய்ப் புகழ்தந்திட; (மாணி)

(ருo) மூடர்களைப்போலக் - கேடடைந்து நன்மைக்
கீடுபடாதோடி - ஆடல் படாமலே
என்றுமொரு நிலைசூழ்ந்திட - எழினோர் சைவந் தனில் வாழ்ந்திட; ()

(ருக) நன்மைத் தீமைரெண்டுந் - தன்னுளிருக்குது
என்றெடுத்துக் காட்டுந் - தன்மநூலைக் கற்று
எங்குஞ்சிதா காஸமென்று - தங்கும்படித் தங்கிடவே; (மாணி)

(ருஉ) மந்திர தந்திர - யெந்திர பந்தமும்
சுந்தர வெண்ணீறே - எந்தை யுருவென்று
சந்ததமுஞ் சிந்தைச்செய்து - பந்தநீங்குஞ் சுதந்தரம்பெறும்; (மாணி)

(ருங) எல்லாக் கலையிலும் - வல்லோமென் றூக்ரமித்
துல்லாசம் பேசிபின் - புல்லிய ராகாமல்
செல்வமழியாச்செல்வம் - செல்வஞ்சிவச் செல்வமெனும்; (மாணி)

(ருச) ஆங்காங்கு வோடியே - யேங்கி யலையாது
பாங்குயர் வாழ்வாகு - மோங்காரமாகிய
பதியின்றுதி யதினீடிட - விதியோய்ந்துமெய்க் கதிநாடிட; (மாணி)

(ருரு) உத்தம சித்தத்துள் - அத்தன் வந்துத்தங்கி
மித்தை யொழித்திடும் - பத்திரசக்யானம்
எத்திசையினு மிங்கித - முத்தி சுழிக்கடல் பொங்கிட; (மாணி)

(ருசு) காண்பவர்க் கண்களும் - மாண்பும் மதிப்புங்கொள்
வீண்டம்பர் நேசத்தை - வேண்டாப்படி நீங்கி
விற்பனர்க ளுறவிற்புக - சொற்சொரூப லட்சணந்திகழ்; (மாணி)

(ருஎ) வெண்ணீ றணியாது - வெகுளியைப் பெருக்கிடும்
புண்கண்ணைப் படைத்தவர் - புலமையோரென்கினும்
போற்றுதவர்களை நீங்கி - சாற்றுதுயர் மதிதாங்கிட; (மாணி)

(ருஅ) சமய நெறிகல்லா - சண்டாள ரெக்குணத்
தமர்ந்து நிலைக்கினும் - அழிவே முடிவல்லால்
அந்தரங்க மொன்றுமிலை - அவர்கள்சிரங் கதிசிலையென; (மாணி)

(ருகூ) ஆசானுக் கன்பும்விஸ் - வாசமுஞ் சிறிதில்லா
பாசாண்டப் பாவிகள் - ஆசைகளொழிந்து
பற்றற்றுயர் நிலைப்பெற்றிட - கற்றக்கலை நெறியுற்றிட; (மாணி)

(௪௰) சிந்தைக்கு யெட்டாத - விந்தை சிவஞானம்
பந்தம் பிடித்தார்க்கு - வந்தணுகாதெனும்
பலனோர்ந்திடும் வழிபிடித்து - நலமோர்ந்திடுந் துதிபடிக்க; (மாணி)

(௪௧) தேவ தேவர்களும் - பூவில்வந்து பூசை
தாவிசெய்தக்கொள்கைக் - காவல்கொள்ளும்படி
தரிசித்துவூழ் வினைவென்றிட - தனித்து சமாதியினின்றிட; (மாணி)

(௪௨) உத்தம பாத்திரஞ்சின் - முத்திரை க்ஷேத்ரந் தீர்த்தம்
பத்தியுந் தாமாகாப் - பித்தரை நீங்கியே
சித்தஞ்சிவ மாகத்தரி - சித்துநிலை யொத்து நிற்கும்; (மாணி)

(௪௩) சத்தியஞ் சாந்தஞ் - சதாக்கியமே சைவம்
நித்திய சாம்பிராச்சிய - நெறியுளோன் சைவனும்
நியமப்படி வுளவாய்ந்து - நிற்பதுவே சமயமெனுப்; (மாணி)

(௪௪) ஆரியராகினுங் - காரியங்கைவிட்டால்
பூரியரென்றுவி - சாரங்காரணமாய்
புகலாகம நேர்மைத்தெளி - திகழவுளந் தனில் மெய்யொளி; (மாணி)

(௪௫) கண்ட குருக்கோலம் - தெண்டமாய்ப் போனபின்
தொண்டர் செண்டாடுதல் - பிண்டம் பிணமெனும்
பெரிதோர்ந் தவரேசிறக்க - அரிய தொழிலியாவையு மறக்க; (மாணி)

(௪௬) பெருமையை வேண்டி - பொருட்செலவழிகும்
மருளரின் கேண்மை - யொருபேர்தும் வேண்டாது
வாசிதனைக் கொண்டுயரு - பாசனையிற் றேர்ந்து நிற்க; (மாணி)

(௪௭) முன்னே புகழ்வதும் - பின்னே பிசழ்வதும்
சின்ன புத்தியாகும் - இன்னலைக் கொள்ளாமல்
சிவசிவவென் றென்றுந்தொழ - சின்மயக்கட லதனில்விழ; (மாணி)

(௪௮) செத்துப் பிறக்கின்ற - சென்ம கன்மங்கொண்டு
இத்தரையில்வந்து - மித்தையிலுழன்று
வசலுற்று சாகாமல் - நேசமுற்று வேகாமல்; (மாணி)

(௪௯) வாசனையாலவ - லேசமாகிவாழ்ந்து
மோசமதாய்க் கடம் - ஆசையினிற் சூழ்ந்து
முத்திநெறி வெறுக்காமல் - மத்தரைப்போல் துறக்காமல்; (மாணி)

(௫௰) மோகாந்த காரத்தில் - மூழ்கிவதையாமல்
ஏகாந்த போகத்தை - இழந்து சிதையாமல்
இன்பமெனும் வீடடைய - மன்னுஞ்சுகா னந்தமடைய; (மாணி)

(௫௧) எடுத்த தேகத்துள்ளே - ஈசனைக் காணவும்
அடுத்த தேகம்வரா — தருள்வழிப் பூணவும்
ஐம்புலனொன் றாய்நிற்க - அறிவெனும் பொருளைக் கற்க; (மாணி)

(௫௨) சித்தசுத்தமுடன் - கர்த்தனைத் தேடவும்
பத்தருடனொரு - மித்துபண் பாடவும்
பாபச்செய லவைநீங்க - பணிதிகழுண்மை யோங்க, (மர்ணி)

(௫௩) சந்தைக் கடையினில் - வந்த வுறவெல்லாம்
பந்த நிந்தையின்றி - சொந்த மில்லையெனும்
பரமவிசே டந்தெரிய - பலவித மாய்கையும் பிரிய; (மாணி)

(௫௪) உண்ணலுடுத்தலால் - ஊதியமொன்றுமில்லை
பண்ணும்பூசை செபதபமும் - பார்வையில்வாரா ததுதொல்லை
பகருமந்த ரங்கபத்தி - சுகபோகமெய் ஞானமுத்தி; (மாணி)

(௫௫) மானாபி மானத்தில் - வாஞ்சைக் கொள்ளாமலும்
தானாகுந்தன்மை - தனைவிட்டுத் துள்ளாமலும்
சருவசாட்சி மாத்திரையாய் - கருணைமிகு கேத்திரியாய்; (மாணி)

(௫௬) அற்றது பற்றெனில் - உற்றது வீடெனும்
சொற்சுவையானதை - கற்று நெறியுற்று
காலமுங் காலனும்போக - கமழும்ஞான மணவிதேக; (மாணி)

(௫௭) ஆட்டங்களை பொம்ம - லாட்டங்களை மெச்சும்
காட்டு மராண்டிபோல் - நாட்டங்களை விட்டு
கலகலத்து துடியாமல் - நிலையலுத்து மடியாமல்; (மாணி)

(௫௮) வித்தைகளில் பிர்ம - வித்தை தனைக்கற்று
சித்த நிலைத்திட - செய்கை யாவையுமற்று;
சின்மய மாகவேநின்று - கன்மங்களனைத்தையும் வென்றிட; (மாணி)

(௫௯) வேதாந்த சித்தாந்த - வேற்றுமை யெண்ணாது
நாதாந்தத் துள்ளே - நடுவெளியிற்சென்று
நமசிவய மெனுஞானம் - நாடிடச்செய் திடுந்தியானம்; (மாணி)

(௬௰) பேதமென்ப தெல்லாம் - பாதகரின்குணம்
ஆதலினா லொருப் - போதும் வேண்டாப்படி
அன்பெனுந் தெய்வந்தானே - அருடருமெய்ப் பொருட்காண; (மாணி)

(௬௧) தூரஞ் சமீபமாய்ச் - சொல்லுஞ் சொல்லிறந்து
வாரமு நேரமும் - வைப்பதை மறந்து
வத்துவினை யுற்று பார்க்க - அத்துவித முத்தியிற்சேர்க்க; (மாணி)

(௬௨) நட்ட நடுவணைக் - கிட்ட முட்டிச்செல்ல
அட்டாங்க யோகமும் - மட்டுப்படுஞ் சொல்ல
அரிதாகிய தவகியானமாம் – பெரிதாகிய சிவஞானமாய்; (மாணி)

(௬௩) எத்தவஞ் செய்கினென் – எத்தொழிற் செய்கினென்
முத்தர் மனமது – மோனத்திருந்திடும்
முறைகண்டவரே கற்றோர் - இறைவன்று டனைப்பெற்றிட; (மாணி)

(௬௪) நேற்றுசெய்த கன்மத்தை - ஆற்றில்கரைத்த புளியாக்கி
மாற்றியே பிறக்காத - வண்கண்ணர்களை நீக்கி
மனமலையா நிலைநின்றிட – தினகரவொளி யினிற்சென்றிட; (மாணி)

(௬௫) உள்ளந் திடுக்கிடும் – பொள்ளலாஞ் சாதிச்சொல்
கள்ள் மொழியென்றுத் - தள்ளுபடியாக்கி
வள்ளலுருக் கண்டேன்ர - வரீமுந் திரமுங்கைவர; (மாணி)

(௬௬) சித்தஞ் சிவமாக - வொத்து நிலைக்கும் ப்ரம
வித்தை தனைக்கற்று - விஞ்சையாலுட் கண்பெற்று
வீடெனு மோட்சந்தன்னுள் - விளங்கியழி யாமல் மன்னு; (மாணி)

(௬௭) அருணெறியைக்கொண்டு – அத்தனை யுட்கண்டு
கருணை தனைவிண்டு - கலையினமுத முண்டு
கங்குல்பக லறநின்றிடும் – கண்ணொளிபோலக் கலந்திடு; (மாணி)

(௬௮) தானே தானுகுயெய் - சாதனைகட் பெற்று
மோனுதிகார - முதல்வ னுருவுற்று
மும்மூர்த்திக ளொன்றுக – முறைபடு யோகவிதேச; (மாணி)

(௬௯) சருவமுந் தானுக - சத்துஞ் சித்துமாக
பொருந்திடு மானந்தப் - புனித சொரூபமாம்
போகமுத்தி சித்திப்பெற - வாகுயர் சித்தத்தில்வர; (மாணி)

(௭௰) வேதமும் போதமும் - நாதமுங் காதலும்
பேதமுந் தோன்றுது - பேசப்படா மௌனப்
பேரின்ப மதிற்கலந்து - பிர்ம சமாதியிற் சூழ; (மாணி

(௭௧) வந்த சனனத்தின் - பந்தமெலாம் நீங்கி
சுந்தர தேகத்துட் - சோதியிற் கலந்து;
சும்மா யிருந்திடும் பேறு - துணைகைவர நற்சீராம்; (மாணி)

(௭௨) சிவப் பிரகாசந் - திகழ நித்தியானந்த
தேவதேவன் மஹா - தேவன் சிதாகாஸ
சிவப்ரகாசம் விளங்க - தினகரனென புகழ் துலங்க; (மாணி)

பசுபதீச்சுரமாலை.

பண் - காந்தாரபஞ்சமம் - நாலடிமேல்வைப்பு.

]o[

எங்குந் ததாகார மானவனே
கங்கையு மான்மழு வுடையவனே
மங்களா கரனே மகத்துவனே
இங்கிதந் திகழ்பவா யெப்பரனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (௧)

அண்டர்க ளருகிருந் தேத்துவோனே
தொண்டர்க ளெஞ்ஞான்றுந் துதிப்பவனே
பண்டையின் வினை தவிர்த் தாள்பவனே
எண்டிசை யோர்க்கரு ளிறையவனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (௨)

கருணையங் கடலே முக்கண்ணனே
தருண மறிந்துதவு தயாநிதியே
அருளுறு தயனே சிவாநந்தமே
இருவினை யகன்றோர்க்கு ளிருப்பவனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (௩)

புண்ணிய வெண்ணீறுருப் போந்தவனே
பண்ணிசைத் தவர்க்கன்பு பணித்தவனே
மண்ணும் விண்ணென்றாய் வளர்ந்தவனே
எண்ணிலா பலவடி வுடையவனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (௪)

அமரர்கட்கரசே வைம்முகனே
தமனியம்போற் சருவத்துந் தழைப்பவனே
சமரசமாஞ் சர்க்குண சாஸ்விதனே
எமன்றனை பாலனுக்கா யுதைத்தவனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம் பசு பதியீச்சுர பசுபதியே. (௫)

முப்புரந் தனைசிரித் தெரித்தவனே
அப்பரவ மணிந்த வழகினனே
செப்பரு ஞானத் திவாகரனே
எப்பொரு டனக்கு முதலவனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (சு)

திருவரு ளுதயமே சின்மயமே
கருவினை யகற்றியாட் கண்ணுதலே
பெருமானே யெம்மானே பேரின்பமே
எருதெனு மால்மிசை வருபவனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம் பசுபதியீச்சுர பசுபதியே. (எ)

நயமிகுந் தொண்டர்க்கு நல்லவனே
செயமிகுந் தேவர்க்கு வுரியவனே
தயைமிகுந் தாயினுஞ் சிறந்தவனே
இயமம் நியமம் வழார்க் கினியவனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (அ)

மன்னுஞ் சுகாதீதமெய்ப் பழம்பொருளே
சன்மக் கடற்கடக்கு நற்புணையே
தன்ம வாரிதியே தயாநிதியே
இன்பவீ டருட்செயு மிறையவனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (கூ)

துகளாம் வினையழிக்குஞ் சூரியனே
புகலரு மறைபுகழ் பூசுரனே
சகலமுங் கடந்தவர் சத்துவனே
இகபர சுகந்தருங் கருணிகனே
ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (௰)

எல்லை யிலாத யேகனே வூ
ழல்வினைத் தவிர்த்தோரு ணடிப்பவனே
செல்வமே சிவபுரச் செழுஞ்சுடரே
எல்லா வுயிர்களுக்கு ளிருப்பவனே

ஈசனே கயிலாசமா மயிலை வாசனேஸ்ரீ கபாலீசனே
எழிடந்தரு ளரவோம்பசு பதியீச்சுர பசுபதியே. (௰௪)

——]*[——

சிவஞானனந்த செழுந்தவக்கீர்த்தனை.

இராகம் — புன்னுகவ்ராளி. ரூபகதாளம்.

பல்லவி.

ஞான சித்தாந்தமிதே - உண்ண வுண்ண
நல்குமின்பமதுவே - சிவ
நமசிவய மெனுமந்த்ரம்-நம்பினோர்க் கென்றுஞ் சுதந்த்ரம்; (ஞான)

அநுபல்லவி.

தான தவப்படி — சற்குரு வாசிரால்
தானுகு மானந்த மோன சிதாகாஸ; (ஞான)

சரணங்கள்.

(௧) வேதமேதுக்கு - பலபொய்யாம் - வியாசமேதுக்கு
வாதனையேதுக்கு - அதனுல்வரும் - வாதுகளேதுக்கு
போதனையேதுக்கு - பேதநிறை - போகங்களேதுக்கு
புஞ்சை நிலம்வளர்ப் - பஞ்சவர் மாயையாம்
வஞ்சச் செயனீங்கிச் - செஞ்சடை வேணியன்
குஞ்சித பாதத்தைத் - தஞ்சமென்றடைந்து
மஞ்சுருவாகவே - விஞ்சைப்பா லருந்தி
மாதவமது கைக்கூட - வள்ளலுறவினைத்தேட
சாதனை நெறிகளுநீட - சருவசாட்சிய மதுநாட
சகசநிட்டை யினிநேட-தரணியெலாங் கொண்டாட; (ஞான)

(௨) கூட்டமேதுக்கு - பலடம்ப - நாட்டமேதுக்கு
ஆட்டமேதுக்கு - ஆபாசத்தால் - சேட்டமேதுக்கு
கோட்டமேதுக்கு — அதனுல்மன - வாட்டமேதுக்கு
ஆட்டி வைக்கின்றவன் - பந்துபோ லாட்டுரான்
காட்டி வைக்கின்றவன் - கருத்துபோல் காட்டுரான்
ஊட்டி வைக்கின்றவன் - உடல்மெச்ச வூட்டுரான்
நாட்டி வைக்கின்றவன் - நாட்போல நாட்டுரான்
நானென்பது யிங்காரு - நமன்வருமுன் உற்றுப்பாரு
நாய்போ லெங்கும் அலையாதே-பேய்போல்மதி குலையாதே
நன்மைசெய்தால் நன்மைவரும்-தின்மைசெய்தால் தின்மைதரும் ()

(௩) ஏசலேதுக்கு - நாற்றத்துக்கோர் - வாசமேதுக்கு
பேசலேதுக்கு - உண்மைகண்டால் - கூசலேதுக்கு
பூசலேதுக்கு - மனவஞ்ச - நேசமேதுக்கு
ஆசானைப்போல - அன்பர்க்கன் றீசன்வந்தான்
மாசணுகாத - வரமுந் திறமுந்தந்தான்
தாசானுதாசனாய் - சங்கர னுவந்தான்
பாசபந்தமற - பதித்துவம் புரிந்தான்
பரமானந்தம் போல்வேறு - பாக்கிய முளதோ கூறு
பத்தி வழியை நீங்காதே - பரதவித்து யேங்காதே
பகருஞ்சுழி முனைபாரு - பாரிலுனக்கு நிகரியாரு; (ஞான)

(௪) எண்ணமேதுக்கு - கள்ளபூசைப் - பண்ணலேதுக்கு
அண்ணலேதுக்கு-பாழோர்க்குபோர்-திண்ணனேதக்கு
வண்ணமேதுக்கு - ஊழாமூளைக் - கண்ணனேதுக்கு
உண்ணலுடுத்தலும் - ஒப்புயர் வாகுது
உண்ணவின்றிக்கோடி - வுயிர்களோ சாகுது
மண்ணுளோர் விண்ணுளோர் - வணங்கிடலாகுது
புண்ணியஞ்செய்தோர்ப் - புகழெங்குந் தாவுது
போனநாளை நினைக்காதே-பொய்யால் மெய்யை சிதைக்காதே
பொறுமையைவிட் டகலாதே-வெறிநெறிகொண் டிளைக்காதே
புத்தியைப்போல் பத்திவரும் - பத்திக்கேற்ற முத்திதரும்; (ஞான)

(௫) காலமேதுக்கு - அதற்கேற்ற - கோலமேதுக்கு
சாலமேதுக்கு - கண்டோர் போற்றுஞ் - சீலமேதுக்கு
தாலமேதுக்கு - உண்மைசொல்லா - மூலமேதுக்கு
பாலமின்றி ஆற்றைப் - பாய முடியாது
ஆலத்தைப் போன்றவிஷ - மாங்கொடியதேது
ஞாலத்தைவென்ற - ஞானிக்கு பிறப்பேது
ஓலமிட்டாவதென் - ஊழ்வினை விடாது
உத்தமரை வெறுக்காதே - ஒதிபோலுடல் பெருக்காதே
ஒருவரையும் நொறுக்காதே - உப்பிட்டோரை மறக்காதே
உன்பவ முன்னையே சேரும்-புன்செயலோ புன்மைதரும்; (ஞான)

(௬) காரமேதுக்கு - முப்புச்சுண்ண - வீரமேதுக்கு
பூரமேதுக்கு - வழலையின் - சாரமேதுக்கு
ஈரமேதுக்கு - கோட்பகை - நேரமேதுக்கு

ஆரணம்போல — அடியார் நடக்கின்றார்
கோரஞ்செய்தீனர் - குடியைக் கெடுக்கின்றார்
பாரந் தெரிந்தோர் - பழியைக் கடக்கின்றார்
தீரமனத்தோர் - சிந்தைவா யடைக்கின்றார்
தெய்வசெய்கை நீங்காதே - நொய்கொதியது தாங்காதே
திருவருள்விட லாகாதே — தீமையைச்சேர்ந்து வேகாதே
சிவசிவசிவ வென்றால்வரும் — சித்திபுத்தி முத்திதரும்; (ஞான)

(எ) இட்டமேதுக்கு - பலபல — கட்டமேதுக்கு
பட்டமேதுக்கு — சொர்னத்திற்கு — வட்டமேதுக்கு
திட்டமேதுக்கு — நன்மைச்செய்யில் - சட்டமேதுக்கு
துட்டருக்கேற்றப் — படிசிட்சை வந்தன
பட்டபாட்டுக்கேற்றப் — பரிசுகள் தந்தன
இட்டதுக்குமே - லாசைமீறி நொந்தன
அட்டாங்கயோக - போகஞ்சொலி லென்கனம்
ஆனதது வொன்றுமில்லை — அவரவர்வினை விடவில்லை
அமராசுரர் களின்சொல்லை — அறிந்தவரானுகார் தொல்லை
ஆசையாகில் நேசம்வரும்-மோசஞ்செய்தால் வேஷந்தரும்; (ஞான)

(அ) நித்தியமேதுக்கு - அன்பிலார்க்கு — பத்தியமேதுக்கு
துத்தியமேதுக்கு - பொய்யாளர்க்கு — சத்தியமேதுக்கு
கத்தியமேதுக்கு போதுபோக்கில் - பத்தியேதுக்கு
எத்தருக்கேற்ற - யிடராய் நிறைந்தது
புத்திபோலீசன் - பூரித்து சிறந்தது
முத்தருக்கேற்ற — முடிவாய்த் துறந்தது
சித்தருக்கான - திறத்திலுரைந்தது
செகசிவபர மாகினதே - சிவமயபர மானததே
சிற்சுக லட்சணம்பாரு - விற்பன ருறவதைக்கோரு
சிந்தைசெயில் நிந்தைபோகும்-வந்தனஞ்செய் பந்தஞ்சாகும்; (ஞான)

(கூ) தங்கமேதுக்கு - பூநீர்வழல் - வங்கமேதுக்கு
துங்கமேதுக்கு - ஞானிக்கழி - அங்கமேதுக்கு
மங்கலேதுக்கு — புடமிட்டும் — பங்கமேதுக்கு
திங்கட் சடையோன் — செயல்போல முடியும்
தங்கும் வினைதன் - தலைமேல்வந் திடியும்
சிங்கமேனும் வேடன் — சீறினல் மடியும்
சங்கையுண்டானல் — சர்வநோயும் படியும்

சங்கமெனவே பலர்கூடி - சங்கீதமும் பண்பாடி
தாம்தாமென மிககாடி - தருணமறிந் துதவாதோடி
தாண்டினதா லென்னவரும்-வேண்டினும் வினையேதரும்; (ஞா)

(௰) ஆரமேதுக்கு - கொல்லபரி - வாரமேதுக்கு
வாரமேதுக்கு - துதிக்கமனந் - தூரமேதுக்கு
தாரமேதுக்கு - வினைசெய்வியா - பாரமேதுக்கு
காரணம்போல - கருத்தது நாடும்
நாரணனும் பிர்மன் - நாடி கொண்டாடும்
பூரண வாழ்வது - பூத்தெழிற் கூடும்
சார தாம்பாள் கவி - சந்தத்ம் பாடும்
சச்சித சிவனே தெய்வம் - சமரச குண முடனுய்வம்
தகைமை யன்பர் துதிசெய்யும் - சாந்த பதவ் யோம முய்யும்
சார்ந்தமன மதுவேவரும் - நேர்ந்த யின்பமதுவே தரும்; (ஞான)

(௰க) ஆக்கலேதுக்கு - அழிவதைக் - காக்கலேதுக்கு
நோக்க லேதுக்கு - மெய்காணாது - நீக்கலேதுக்கு
மோக்க மேதுக்கு - அறிவில்லா - ஆக்கமேதுக்கு
போக்குக் சுத்திப்போட்ட - பொய்யுட லோங்கும்
சாக்குகட் சொல்லிசன் . மார்க்கத்தை நீங்கும்
ஏக்கம்வர் தனுக - ஏதத்தைத் தாங்கும்
வாக்கது மாறின் - வழிகள் பின் வாங்கும்
வருவது வருவதே தருகும் - மனம் போல் மாங்கல்யம் பெருகும்
வஞ்சமனம் பொல்லாது - வள்ள லெனினும் வெல்லாது
மதியது நேரது குலவும் - துதிநேரது பதி நிலவும்; (ஞான)

(௰உ) தானமேதுக்கு - நெறிநில்லா - தியானமேதுக்கு
மானமேதுக்கு - மழைத்தரா - வானமேதுக்கு
மோனமேதுக்கு - ஐயோ! வீண் வாய் - ஞானமேதுக்கு
ஊனுற் கொழுக்கும் - உடலொன்ப தோட்டை
ஈனம் விளைவித் - திடுஞ் சுடு காட்டை
போனதை யெண்ணிப் - புலம்பும் பொய்ச் சேட்டை
பான மருந்திப் - பலுகும் புழு வீட்டை
பற்றினுலுங் குற்றமிலை - பதி நிலையடைவது வெகுதொலை
பாவாதீத மதுவந்திட - பக்தி வழியது தந்திடும்
பங்கயப் பதமே தருகும் - பரிபூரண வாழ்வே வருகும்; (ஞான)

(யசு) கலைகளேதுக்கு - மெய்யை சொல்லா - நிலைகளேதுக்கு
சிலைகளேதுக்கு - கோயிலில்லா - மலைகளேதுக்கு
கொலைகளேதுக்கு - தெய்வந்தொழ - வலைகளேதுக்கு
புலை மக்களுக்குப் - போதம் வராது
தலைமை யில்லான் - தவம் நிறை வேறாது
விலையிலா மாணிக்கம் - வித்தினைத் தாராது
இலையேவே ரொருவழி - இறைவன்றிரமோதும்
இகபர சாதனமாகும் - எழிலாம்பதங் கைக்கூடும்
இன்பமும் வீடதுவாகும் - ஈசனுலகா னதை நாடும்
என்றும் மனமேதஞ்சம் - இதையுணரி லேன்வஞ்சம்; (ஞான)

(யசா) பாசமேதுக்கு - அற்பவிசு - வாசமேதுக்கு
வேசமேதுக்கு - உண்மையில்லா - நேசமேதுக்கு
வாசமேதுக்கு - அதனுற்பின்னுலா - யாசமேதுக்கு
மோசம் வருமுன்னே - முத்தியை யோர்ந்து
நாசயேமன் வழி - நாடாது தேர்ந்து
தேசமாய அவ - லேசத்தை தீர்ந்து
பேச வொண்ணுத - பிர்மநெறி சேர்ந்து
பிங்கலை ரேசக பூரக - பீடுயர் நிலையது சூழ
பேதா பேத மதுகடந்த - பெரியோன் கழ லதில்வாழ
பிரியாதவ மது வந்தால் - அரியஞான மது சொந்தம்; (ஞான)

(யரு) ஆதியேதுக்கு - அதற்கோ - ரனுதியேதுக்கு
நீதியேதுக்கு - மண்ணுக்கோர் பொய் - சாதியேதுக்கு
ஓதியேதுக்கு - அன்பிலார்க் காதில் - ஊதியேதுக்கு
வாதிருவர்ச் செய்ய - மலையானக் காலத்தில்
பூதியைப் போலுண்மைப் - பூர்த்தது தாலத்தில்
மோதி யடித்திடி - லோங்குமோ காலத்தில்
போத வேதமது - பொலியாதக் கோலத்தில்
பொய்யினுல் பிர்மன் வாடி - புகழ்தனை யிழந்தா னன்று
புலமை யில்லார்ப் பலர் கூடி - போற்றிலுண்டோ யிலை நன்று
புத்தியைப் போற பத்தி வரும் - சித்த சுத்தி முத்தி தரும்; (ஞான)

(யசு) கூடலேதுக்கு - அருளில்லாப் - பாடலேதுக்கு
தேடலேதுக்கு - காடுமலை - ஓடலேதுக்கு
சேடரேதுக்கு - அதிற்குடி - கேடரேதுக்கு

மாடகூடமிருந் - தாலுமென்னச் செய்யும்
மூடருறவான - தென்றும் நல்லோரை வையும்
ஓடமின்றிப் புணரியைத் - தாண்டலாமோ நையும்
ஊடலடைந்துடல் - மூடப்பையைப் பையும்
உதவியிலர்ன்தவ நேர்மை - உலவிடாது புவிமீது
ஓகோயிதற் காய்ப் பேதம் - உரைப்பவருளரோ வாது
ஓங்கினுமோர் நாட்சாகா - தாங்கிடச் சுடலையில் வேகா; (ஞான)

(௰எ) பந்தமேதுக்கு - ஊத்தைக்கொரு - அந்தமேதுக்கு
சொந்தமேதுக்கு - நன்மைச் செய - மந்தமேதுக்கு
கந்தமேதுக்கு - மாயைக்கர - விந்தமேதுக்கு
விந்தையினுற் பல - வேடிக்கைக் காட்டி
சந்தைக் கடையுற - வானதை நாட்டி
நிந்தை யதனில் - நிலைத்திருண் மூட்டி
கந்தையதாகு - மகந்தையில் மாட்டி
காலனுக்கு வுயிர்போக - கடமதுவு மண்ணுக
கருத்தது சிதறியே சாக - கன்ம வினையினுல் தேகம்
கலந் தழியா நிலைதந்திடும் - பலனது கைவர முந்திடும்; (ஞான)

(௰அ) அண்ட மேதுக்கு - அதிற்பல - பிண்டமேதுக்கு
பண்ட மேதுக்கு - உண்டுபலன் - கண்டதேதுக்கு
தொண்ட ரேதுக்கு - அவராற்கன்ம - கண்ட மேதுக்கு
தண்டந் தெண்டங்கண்டந் - துண்டமானுலும்
விண்டவர் சொல்லில் - விளங்கா தானுலும்
குண்டத்திற் குந்தி - யோகமே பூணுலும்
வண்டமிழாலரன் - வசமே யானுலும்
மறையதின் வழியே நின்று - வள்ளலுருவைப் பார்த்து
மாயைச்சிரமதைக்கொன்று - மன்னுங்கலை தனைச்சேர்த்து
வணங்கினவரருள்பெற்றூர் - இணங்கினவரே கற்றூர்; (ஞான)

(௰௯) ஆசை யேதுக்கு - ரோஷமில்லார் - மீசையேதுக்கு
பாசையேதுக்கு - சேறக்கான - யீசையேதுக்கு
பூசை யேதுக்கு - பக்தியில்லார் - ஓசையேதுக்கு
காசாசைக் கேற்ற - கதைகட் படிப்பதும்
வேசைகட் போல - மினுக்கி நடிப்பதும்
ஈசனைக் கண்டதா - யெகிறி துடிப்பதும்
மாசற்ற வண்ணமாய் - வாக்கில் முடிப்பதும்

மன்னும் பலவித நோக்கம் – வந்தாலு மென்னத்தேக்கும்
நன்மை யொன்றே தரும்பாக்கியம் - நாடினவர்களெல்லார்க்கும்
நடுநிலைமையே சர்ப்பாத்திரம் - ஒடுக்கமதுவே சிவ க்ஷேத்ரம்;(ஞான)

(உ௰) அஞ்சலேதுக்கு - தன்மஞ் செய்ய - வஞ்சமேதுக்கு
கெஞ்சலேதுக்கு – இட்டபின்னே – தஞ்சமேதுக்கு
கொஞ்சலேதுக்கு - அஞ்ஞானத்தால் – துஞ்சலேதுக்கு
வெஞ்சினத்தாலே - வெகுளியைப் பெருக்கி
பஞ்சது நெருப்பில் - பற்றவே யுருக்கி
பஞ்சபூதப் பேயின் - பல்விஷ நெருக்கி
இஞ்சித் தின்னுங் குரங் - காக்கியே சுருக்கி
ஏகாந்த மாவதை விட்டு - எதிருக்தம் பேசிக்கெட்டு
சாகாநெறி தனைச்சுட்டு – தானெனுமமதைப் பட்டு
சனன சமுத்திர மதிலிறங்கி – தானழியா வரம்பெருகும்; (ஞான)

(உக) ஆட்டமேதுக்கு – பலடம்பவாய் – நீட்டமேதுக்கு
ஊட்டமேதுக்கு - புலாலோங்க - யீட்டலேதுக்கு
காட்டலேதுக்கு - மலவாயைப் - பூட்டலேதுக்கு
சாட்டியும் பம்பரம் – தானுடேன் காட்சி
காட்டில் நிலவெரிக் - காரண சூட்சி
எட்டி லெழுதுநூ - லியாவர்க்கு மாட்சி
தாட்டிக மாய்த்தரத் – தான் கண்டு ஆட்சி
தன்னிலே நின்றே பாரு – சமய நேர்மையிற் சேரு
சத்துசித் தானந்த மதைச் - சார்ந் திருப்பதே சீரு
சகல போக மதுவாமே – தத்வமசியின் முடிவாமே; (ஞான)

(உஉ) சுத்தமேதுக்கு - கருக்குழியினில் - சுத்தமேதுக்கு
மத்திப மேதுக்கு – பற்றற்றோர்க்குவிச் – சித்திரமேதுக்கு
உத்தம மேதுக்கு - தனைக்கண்டால் - கர்த்த னென் றேதுக்கு
அத்தியெனப் பாய்ந்து – ஆளைப் பாழாக்கியே
சித்தியடையா வீண் - சீடரைக் கீழாக்கியே
வத்துவின்ன தென் றுணரும் – வகைகாணு வழி தேக்கியே
மித்தையினுக் கேயுழைத்து - விழலுக்கிறை நீராக்கியே
விட்டகுறையே தான் வந்து – தொட்டுக் கொள்ளவே நொந்து
எட்டப் படாமலே நின்று – ஏங்கிட வுயிரைக் கொன்று
தட்டென பொட்டென விழாது –கெட்டு நொந்துபின் தொழாத; ()

(உங) யோகமேதுக்கு - எட்டுவித - யூகமேதுக்கு
போகமேதுக்கு - தனையறியாவி - வேகமேதுக்கு
தேகமேதுக்கு - கன்மம்நீங்கா - யாகமேதுக்கு
ஆகமங் கைக்கொண்டா - ரங்நெறியே செழித்து
மோகக் குரோதப்பேயை - முற்றுந் தலையையழித்து
ஏகமனத் துடனேய்ந்து - எமனெனும் மரணஞ் செயித்து
பூகம்பம்போ லசையாது - புனிதமலி நிலையிற்கொழித்து
பூமணம் நீங்காவிதமே - புத்திசித்த மொன்றாக
நேமநிட்டை வேண்டாமலே - நிரதிசயானந்தமதாக
சோமனைப்போல் பிரகாசம் - ஜொலித்திடநிறையுபதேச; (ஞான)

(உச) கங்கையேதுக்கு - மூக்கைப்பிடித்து - தங்கலேதுக்கு
பொங்கலேதுக்கு - பொசிப்பென - வுங்கலேதுக்கு
இங்கலேதுக்கு - பசிகொண்ட - மூங்கலேதுக்கு
செங்கண் மால்விடைமேல் - தங்குஞ் சிவானந்தன்
மங்கைபங்காளன் - மங்காவொளியினன்
எங்கும் புகழ்மன்னுஞ் - சங்கரன் சங்காரன்
பங்கயத் தாளருள் - மங்கள வாழ்வினன்
இங்கித செயலைப்பார்த்து - இதயமதி லன்பு பூர்த்து
ஐங்குண மகிமையைப்பார்த்து - அப்பாலுமுப்பாமூர்த்வ
பிங்கல சுழுச்சியிற்சேர்த்து - பேசாமௌன சுகமார்க்க; (ஞான)

(உரு) குட்டையேதுக்கு - ஒரேசென்மத்தில் - நெட்டையேதுக்கு
தட்டையேதுக்கு - பலபல - வட்டையேதுக்கு
முட்டையேதுக்கு - இருசாதி - செட்டையேதுக்கு
தட்டுமுட்டுப்போன்ற - யெட்டுசாண் வீட்டை
கட்டுங்கனத்துடன் - செட்டுசெய் மூட்டை
விட்டுவிட்டுத்தங்க - மட்டுப்படா கேட்டை
மொட்டை யடித்தும் - விட்டந்தாடி பூட்டை
பட்டம்பகலைப் போல்காட்டி - பட்டமெனப் பறந்தாட்டி
பட்டிமாடாகப் பூட்டி - விட்டகதியிலே வாட்டி
இட்டபடியே நில்லாது - இட்டமவைகட் செல்லாத; (ஞான)

(உசா) சென்மமேதுக்கு - பாசபந்த - கன்மமேதுக்கு
தன்மமேதுக்கு - சத்தியமிலான் - வன்மமேதுக்கு
இன்மமேதுக்கு - வினைமலி - துன்பமேதுக்கு

அன்பே சிவமா - யமர்ந்த தறியாமல்
துன்மந்திரியால் - தொல்லையுண்டுத் தெரியாமல்
பன்னகவாய் நஞ்சைப் - பருகியே வெறியாமல்
நன்மை செய்வோருக்கு - நமனாய்த் திரியாமல்
தன்னைத் தானே யுணர்ந்து - மின்னுங் குண்டலியை மணந்து
சின்மய சொரூபம் அணைந்து - மன்னு ஞானப் பால் கொணர்ந்து
அன்னையுமப் பனுங்குருவா - யண்ண லரசாய்த்தா வுண்ணும்; (ஞான)

(உஎ) காரிய மேதுக்கு - பயன்படா - வீரிய மேதுக்கு
சூரிய னேதுக்கு - அஞ்ஞானத்தில் - ஆரியனேதுக்கு
பாரியு னேதுக்கு - வேட்கை நீங்கா - சீரியனேதுக்கு
மாரி யில்லாப் பயிர் - வளர்ந்து வோங்கிடுமோ
பூரிய னுள்ளத்திற் - பொய்மை நீங்கிடுமோ
நேரிலரனைக் கண்டால் - நினைக்கப்பின் வாங்கிடுமோ
பேரியடித்துச் சொலினும் - பேய் மனமதைத் தாங்கிடுமோ
பிர்மானந்த மதுத்தானே - நிர்மல சுகமது வானே
சர்வசிதா காஸகோனே - பர்வத கயிலைத்தானே
விர்த்தியானக் கலைபோகம் - விஞ்ஞானத்தி னிலையாகும்; (ஞான)

(உஅ) கற்றதேதுக்கு - தசதீட்சைப் - பெற்றதேதுக்கு
உற்றதேதுக்கு - உடலாவியை - விற்றதேதுக்கு
சுற்ற மேதுக்கு - பிணமானப்பின் - நிற்ற லேதுக்கு
அற்றது பற்றெனி - லுற்றது வீடு
மற்றதெலாஞ் சுமை - மாயச் சுடுகாடு
சற்றேனு மெண்ணார்க்கு - சனனத்தின் பாடு
வற்றாச் சமுத்திரமாய் - வளைக்கும் வினைக் கூடு
பெற்றாரிலை யுற்றாரிலை - பேயாய்த் திரிந்தலையாதே
நற்றாயக சிவநாதனை - நம்பித் தொழ மலைக்காதே
காலுந்தேதி யிலை யங்கே - கோளும் பகை நிலைக்காதே; (ஞான)

(உகூ) கலவி யேதுக்கு - நடைப்பிணமா - யுலவலேதுக்கு
புலவ னேதுக்கு - சத்தியமில்லாப் - புலமை யேதுக்கு
நிலவு யேதுக்கு - அமாவாசையிற் - கலவ லேதுக்கு
தலங்களென்பது - சஞ்சிதம் போக்க
குலங்க ளென்பது - கொடுமைக் காளாக்க
புலன்க ளென்பது - பொய்யு மெய்த் தேக்க
மலங்க ளென்பது - மகிமையை நீக்க

திலக னெனு மண்ணடன்னை - சேவை செயின் வருமோக்கம்
அலகை யெனவே யலை மனதை - அடக்கி யாளத் தருநோக்கம்
அனுபவிகட்கே தெரியும் - அகண்டாகார சொரூப சூக்ம; (ஞான)

(நய) கற்பனை யேதுக்கு - அருளில்லார் - சற்பனை யேதுக்கு
நற்பல னேதுக்கு - அதிலேகன்ம - துற்பல னேதுக்கு
விற்பன மேதுக்கு அன்பில்லார் சொல் - சொற்சுவையேதுக்கு
ஒற்றுமையில்லா - னுறவென் றுங் கேடு
வெற்றுரை யென்னும் - வெகுளியைப் போடு
முற்றத்திற் போடு முன் - முத்தியைக் கூடு
பொற்பூவின் வாசம் - பொருந்தினு லியாரீடு
பற்பல வீண்கதைப்படித்து - பாபக்குண செயலடுத்து
பரமானந்த மதை விடுத்து - பக்திநெறிகளைக் கெடுத்து
பாழாகாமல் துணை செய்யும் - மாழை சூழ் தவநிலையுய்யும்; (ஞான)

(நக) தனம தேதுக்கு - கண்ணைமயக்கும் - தனங்களேதுக்கும்
கனம தேதுக்கு - பெருமையில்லா - யினம தேதுக்கு
சனன மேதுக்கு - தவஞ்செய்ய - வனம தேதுக்கு
தினகரனைப் போலத் - தீமைத் தெரியுது
சினமதனுற் பல - செனன முரியது
மனன தியானமே - மகிமைக்குட் பெரியது
நினைவும் நினையாமை - நேடுத லரியது
தினை யளவுடையப் பாபம் - தேகமதனை யெடுக்கும்
பனையைப்போலவே வளர்ந்து - பாம்பென விஷமே கொடுக்கும்
பரிதாபங்கட் சேராது - சரியிரோமெனக் கூறுத; (ஞான)

(நஉ) ஆய்வதேதுக்கு - உளவறிந்தும் - மாய்வதேதுக்கு
தேய்வதேதுக்கு - இந்திரியம் - சாய்வுயேதுக்கு
பாய்வதேதுக்கு - மடைதிறந்தும் - ஓய்வதேதுக்கு
காய்வது காய்ந்து - காயகற்பந்தேடுது
மாய்மாலக்கள்ளரால் - வசைக்கவிபாடுது
வாய்மையுள்ளார் கண்முன் - மறைந்தங்தோவோடுது
தூய்மை நெஞ்சகத்துள் - தொங்தோமென்றாடுது
துலக்கமுள்ள ததுபக்தி - தொல்லைகளொழித்திடுஞ்சத்தி
இலக்கணமென்பது சித்தி - இலட்சணமதுவே முத்தி
என்றுமொன்ருய் நிலவிடுமே - இறைவனுநாம் குலவிடவே (ஞான)

(௩௩.) சாத்திர மேதுக்கு — மெய்யுணரார்வீண் . க்ஷாத்திரமேதுக்கு
பாத்திரமேதுக்கு - சத்திய மிலார் — நேத்திர மேதுக்கு
சூத்திர மேதுக்கு - புலாலுடம்பிற் . சூத்திர னேதுக்கு
மூத்திரக் குப்பையை - மூடிவைத் தேத்தி
கோத்திர மொன்றுண்டாய்க் - குடியிற் பூசாத்தி
ஆத்திரள் மேய்த்தவன் - அறியாக் கன்மப்பாத்தி
தாத்திரை மாயைக்குத் - தான் மூனமே காற்றில்
தழலுடன் பஞ்சதுவாகத் - தவித்து யெரியனல் மூட்ட
தக்தோங்தகுந் தரிகிடவென - சனனமதை யூழதுவாட்ட
தாம்தாமென வெனநின்று — சரிசரி தமபத வென்று; (ஞான)

(௩௪) அந்தர மேதுக்கு — ஆதித்தனும்- சந்திர னேதுக்கு
கந்தங்க ளேதுக்கு — மூவாசையாம் - தொந்தங்க ளேதுக்கு
மந்திர மேதுக்கு - அசனுட்பல - யந்திர மேதுக்கு
முந்தி தவத்தைப் போல் - முன் வந்து காக்கும்
பிந்துக்ளை மூன்றுக்குட் — பிரியாநிலைத் தேக்கும் [கும்
சுந்தரி மனோன்மணி யம்பிகைத் - தொடர்ந்தருண் விழிநோக்
தந்தையுந் தாயென வுளத்தில் - தாண்டவ மாடிடப்பார்க்கும்
தகதகதக ஜேம் ஜேமெனத் - தையல் நைய தக்கிடவென
தாளமேள பூரிகுடா - தான்முழங்கப் பதநிசமென
தக்கிட தொக்கிட சிக்கிய — நொக்கிட நுக்கிட முக்கிய; (ஞான)

(௩௫) ஆசன மேதுக்கு - புள்ளிமான்குக்கி — டாசன மேதுக்கு
சாசன மேதுக்கு — உடல்மறைந்தப்பின் - தோசங்க ளேதுக்கு
ஓசன மேதுக்கு - தொழுக்கத்தின்றமு — பாசனை யேதுக்கு
ஆசிர்ம மொன்றி - லடங்கிட வேண்டும்
நாசி முனையி — னடங்காண யாண்டும்
தேசிகன் சிவப்ரகாசன் - சொல் தூண்டும்
வாசியைக் கைக்கொண்டால் வாழ்குவர் மீண்டும்
வந்த செனனங் கடைத்தேறும் — வள்ளலுடனே வுறவாகும்
சிந்தாகுல மெல்லாந் தீரும் — தேகம் பொன் விபூதியாகும்
சந்ததமன்பர் கொண்டாடும் - தனை மறந்தால் சமாதியதாகும் (ஞான)

—‡—

கன்மதன்ம கதியாஸ்ரயம்.

தீபதைகள்.

[கன்மி] ஆனந்தப் பரவெளி யகண்ட சிவசொரூப
வண்ணடாட் போற்றுகின்ற – தன்மபுருஷா; (அண்ண)
தானந் தவப்படியே சுகிதகி யெனவந்து
தலையாட்டித் திரிந்தன ளியான் – தன்மபுருஷா; (தலை) (1)

[தன்மி] சத்துசித் தானந்தந் தாமாய் விளங்குநிலைத்
தனையடைய வேண்டுமே – கன்மபுருஷா; (தனையடைய)
பத்தி ரசங்குடித்து பரமானந்த சந்தோஷம்
பற்றிஞ லின்ப மல்லவோ – கன்மபுருஷா; (பற்றிஞ) (2)

[கன்மி] தானுகுந் தன்மையது வாய்த்தப் போழ்து வல்லவோ
சமரச சுக முண்டு – தன்மபுருஷா; (சமரச)
ஆனேறும் பரமனி னற்புதக் கழல் பாடி
லன்று ஞானங்கைவருந் – தன்மபுருஷா; (அன்று) (3)

[தன்மி] ஊனுஞ் சுவற்றிஞேடு வொன்பது மலவாயினி
லுள்ள கள்ளரைவரை – கன்மபுருஷா; (உள்ள)
வானேறு மதியம்போ லுளவதனை யாராய்ந்து
மௌன தரிசனங் காண்பாய் – கன்மபுருஷா; (மௌன) (4)

[கன்மி] முடங்கவு மைவர்க ளொடுங்கசற் குருபுண்யம்
முந்திச் செய் திருக்கணுமே – தன்மபுருஷா; (முந்தி)
கடபடம் வினைக் கொண்டு அலையொழியா நிலையாற்
காண்பதெங் ஙனஞ் சொல்வாய் – தன்மபுருஷா; (காண்) (5)

[தன்மி] காண்பதும் பூண்பதுங் களிப்பதும் விளிப்பதுங்
கபட நாடக மல்லவோ – கன்மபுருஷா; (கன்ம)
வீண்செய லனைத்தையும் விட்டுத் தனிநின்று ளுள்
விளங்கும் பொய் மெய்யிரண்டும் – கன்மபுருஷா; (விள) (6)

[கன்மி] கடமா மெழுபிறவி தோற்ற மாற்றமெலாங்
காலனுங் காலமுண்பான் – தன்மபுருஷா (காலனுங்)
விடமுண்ட சிவனுங் கன்ம வித்தினைப்போல
விளைவாகி வனத்தோங்கும்–தன்மபுருஷா (விளைவாகி) (7)

[தன்மி] காயாதக் கனியுண்டுவுண் மாயாதக் குண்டலியைக்
கலந்தார்க்கும் பிறவியுண்டோ - கன்மபுருஷா (கலந்)
ஓயா விசாரமற்று வுறக்கமு மூண்ணலற்று
ஓடுங்கிட வுபாயம்வேண்டும்-கன்மபுருஷா (ஓடுங்) (8)

[கன்மி] விளங்கிடு விதிமதி விபரீத சுகிதுகி
வெளிப்போலுள் விளையுமோ - தன்மபுருஷா (வெளி)
களங்க மலியும் பூர்வக் கன்மம்பூஜை யெலியாய்க்
கடத்தோ டுயிர்ச்சிக்குண்ணும் - தன்மபுருஷா (கடத்) (9)

[தன்மி] உலக வியலழிந்து வுள்ளச் செயலொழிந்து
உபாதிகளற்று உனைப்பார் - கன்மபுருஷா (உபாதிக)
சலனச் சஞ்சலமின்றி சத்துசித்தா னந்தமாய்த்
தழைத்துநீ சுகித்திருப்பாய் - கன்மபுருஷா (தழைத்) (10)

[கன்மி] அஞ்ஞானச் செயலோய்ந்து அகண்ட சிவானந்தத்தி
லடங்குமுறை போதிப்பாய் - தன்மபுருஷா (அடங்)
மெய்ஞ்ஞான நிலைவாய்க்கின் விரதந் தபசு நிட்டை
விட்டோடிப் போகுமன்றோ-தன்மபுருஷா; (விட்) (11)

[தன்மி] சூக்கும பஞ்சாக்கர சொரூப யிலக்கணத்தின்
சூட்சம் பேசாப்படியாம் - கன்மபுருஷா; (சூட்சம்)
ஆக்கைக்குட் சீவனுஞ் சிவத்தோ டைக்கியமுற்ற
லதுவே சமாதியாகும் - கன்மபுருஷா; (அதுவே) (12)

[கன்மி] அங்க லிங்கவாரு தார சிதம்பர
வைம்பத்தொன் றைந்தொன்றுமோ-தன்மபுருஷா; (ஐம்)
தங்குமனம் பலியாய்த் தத்துவங்கட் பொசிப்பாய்த்
தான்படைத்தார்ப் பிறப்பரோ-தன்மபுருஷா; (தான்) (13)

[தன்மி] ஓங்காரப் பிரணவ வுள்ளுரை மூலைபி
லொளித்திடி லவைத்துலங்கும் - கன்மபுருஷா (ஒளித்)
தேங்கா யுடைந்திரண்டா யண்ட பிண்டமெனவே
தெரியசற் குருவேண்டும் - கன்மபுருஷா; (தெரிய) (14)

[கன்மி] தெரிந்தசற் குருநாதன் றெரியச்சொ லொருசொல்லாற்
சித்தியெல்லாங் கிடைக்குமோ - தன்மபுருஷா; (சித்தி)
பிரிந்தது வுறவானாற் சலனச் சஞ்சலந்தானே
பிடித்துக் கெடுக்குமன்றோ - தன்மபுருஷா (பிடித்) (15)

[தன்மி] உள்ளதை வெளியாக்கி வுற்றக் கதவடைத்தா
லுடைத்துட் செல்லுவாருண்டோ-தன்மபுருஷா (உடை)
கள்ளமாய வேடமுங் கபட பக்தியாசாரங்
காலனுய்த் தனையேகொல்லும்-தன்மபுருஷா; (கால) (16)

[தன்மி] உசிமுனையினின்று வுறங்கியே வுறங்காது
உச்சிலையைப் பார்ப்பதெப்போ - தன்மபுருஷா (உச்சிலை)
நாசி முனையில் அங் உங் மங் சிங்கென்று
நயனங்கண்டாற் பிறவேன்-தன்மபுருஷா; (நயனங்) (17)

[தன்மி] மனமற்று சினமற்று கனதன கலையுற்று
மயக்கற்றால் வெளிப்படும்பார் - தன்மபுருஷா; (மயக்கற்)
முனமுற்ற வினையற்று மோனப் பதவியுற்றால்
முத்தியல்லாது வேறென் - தன்மபுருஷா; (முத்தி) (18)

[தன்மி] கண்ணுட் கலந்தவொளியைக் காணும லூரூராய்க்
காளைமாடாய்த் திரிந்தேன் - தன்மபுருஷா; (காளை)
விண்ணுள் மின்னலொளிக்கும் விதம்போல்சிவத்தின்மை
விழையுஞ் சாதனைப் போதிப்பாய்-தன்மபுருஷா (விழை)

[தன்மி] காரசாரவீர பூர காயகர்ப்பங்கட்
கனலிற்சுட் டெரித்தவரே - தன்மபுருஷா; (கனலிற்)
தூரமென்பதைத்தன்னுடலங்கும் பார்த்து தத்துவத்
தொம்பதத்திற் றேய்வாரே - தன்மபுருஷா (தொம்) (20)

[தன்மி] பன்னிரு கலைக்குள்ளே படுத்திருக்கும் பாம்பைப்
பார்த்தாற் சீறிகடிக்குமோ - தன்மபுருஷா; (பார்த்தாற்)
முன்னம் பார்த்ததுண்டானல் முத்தங்கொடுத்தமுர்தம்
மூணங்காந்து வூட்டாதோ - தன்மபுருஷா (மூணங்) (21)

[தன்மி] எங்கு மொருபடித்தா யெல்லாஞ் சிவமயமா
யெண்ணுவார்க் கென்னவேண்டும்-தன்மபுருஷா (எண்)
தங்கந்தன் னொளியொன்றே சான்று மதுபோற் சத்தியஞ்
சார்ந்தார் சீவமுத்தராம் - தன்மபுருஷா; (சார்ந்) (22)

[தன்மி] உருவமு மருவமு மருவருவமு மில்லா
துடல்கொண்ட வகையென்னவோ-தன்மபுருஷா (உட)
இருவினைக்கு யீடாக பிறந்து யிறந்திதெந்
கெவரோ யிதனைச் சகிப்பார்-தன்மபுருஷா; (எவரோ) (23)

[தன்மி] தாய்க்கருவில் மாயமாய் சனித்து நோயும்பேயுண்டு
சாவதற் குற்றனையே - கன்மபுருஷா; (சாவதற்)
ஆயன் விதித்ததிலே யவரவர்க்கன்மம்போ
லரனன்று படைத்தனனே - கன்மபுருஷா (அர) (24)

[கன்மி] கன்மம்போ லுருநிறை குறைசுக துக்கங்கட்
காட்சியாய் நின்றதென்னே - தன்மபுருஷா; (காட்சி)
மன்னுமுடலுமாவிப் பொருளை தத்தமாக்கினல்
வாய்க்குமோ மோட்சநிலை - தன்மபுருஷா; (வாய்க்) (25)

[தன்மி] வினையின்றி சடமில்லை சினையின்றி மீனில்லை
வித்தின்றி விளைவுண்டோ-கன்மபுருஷா; (வித்தின்றி)
நினைவின்றிக் கனவில்லை நிட்டையின்றி தபமு
நேர்பட வாய்த்திடுமோ - கன்மபுருஷா; (நேர்பட) (26)

[கன்மி] சினையினுஞ் சிறிதாலம் விதைபெரும் விருட்சமாய்
செனித்திட வனுபவமே - தன்மபுருஷா; (செனித்)
பனையினை நிகரானைக் கருவிற் பனியளவாய்ப்
பாய்ந்திவண் மலிந்ததுவே - தன்மபுருஷா; (பாய்ந்) (27)

[தன்மி] வினையதை விதைத்தவன் வினையை யல்லாமற்படி
வேறொன்றை யறுப்பாரோ - கன்மபுருஷா; (வேறொன்)
தினையை விதைத்தவன் வினையதை யறுப்பதாய்
செப்பிலுலகஞ் சிரிக்கும - கன்மபுருஷா; (செப்பி) (28)

[கன்மி] பண்டு முளைப்பதது அரிசி வுமியல்லாது
பலிதமாய்த் தழைக்குமோ - தன்மபுருஷா; (பலித)
கண்டு மனுபவத்திற் கருத்தை வேறுகச்செய்து
காலனுக் காளாவதேன் - தன்மபுருஷா; (காலனு) (29)

[தன்மி] உண்டதது யேப்பத்தில் வருவதுண்மை யாயினும்
ஒத்துக்கொண்டவரெவர் - கன்மபுருஷா; (ஒத்துக்)
விண்டதை மறுக்கும் விதமின்றி யுண்மைகொண்டால்
விகற்ப சங்கற்பங்கட்போம்-கன்மபுருஷா; (விகற்ப) (30)

[கன்மி] சங்கற்ப வாசனைக டானுமொழிந்திடுஞ்
சமத்வமுண்டோ நெஞ்சிற்கு - தன்மபுருஷா; (சமத்வ)
தங்கு மனுலையஞ்செய் சற்குரு தரிசனைத்
தன்னு லழியுமன்றோ - தன்மபுருஷா; (தன்னு) (31)

[தன்மி] சித்தஞ் சுத்தமில்லாமற் செய்யுஞ் செபதபத்திற்
சீர்மைகள் வந்தணுகா - கன்மபுருஷா; (சீர்மை)
மத்தர் பேயருடனே பாலரெனவே முத்தர்
மன்னுவர்க ளுலகில் - கன்மபுருஷா; (மன்னு) (32)

[கன்மி] நலம்பொலமா மிரண்டு மாயாமரம் வினையி
னடுவில் முளைத்திருக்க - தன்மபுருஷா; (நடுவில்)
குலம்பல புலம்பியே கொடிய வேட்கைசேட்டையாற்
கூத்தாடி மறைந்திடுதே - தன்மபுருஷா; (கூத்தாடி) (33)

[தன்மி] இல்லாப் பொருளதனை யிருப்பதாய் மலைவுகொ
ளீனர்க் கெவருரைப்பார் - கன்மபுருஷா; (ஈனர்க்)
வல்லா னகத்திருக்க வாழ்த்திசண் டானந்தித்து
வணங்கார்க்கு யேது முத்தி - கன்மபுருஷா; (வணங்) (34)

[கன்மி] மணநிறைந் திடும்பூர்வ வாசனையதி விழிந்து
மனந்தடு மாற்றமுற - தன்மபுருஷா; (மனந்)
குணப்படும் வழிநெறி கூடுவ தெங்ஙனமோ
கூறு முண்மை நிலையை - தன்மபுருஷா; (கூறும்) (35)

[தன்மி] வாசனை யொன்றசனுல் மாயு தந்தோ வுலகம்
மாற்றுமோர் வழியுண்டு - கன்மபுருஷா; (மாற்று)
ஈசனுரு வெனவே ஆசானை வழிப்பட்டா
லெவையும்வந் தணுகாது - கன்மபுருஷா; (எவையும்) (36)

[கன்மி] அருண்மய மதுகொண்ட அண்ணல் குருபார்வையி
லகப்படுவ தெந்தநாள் - தன்மபுருஷா; (அகப்படு)
தெருண்மன வசப்படுந் திறமையொன்று வாய்த்திடுந்
திறமை சித்திக்க வேண்டும் - தன்மபுருஷா; (திறமை) (37)

[தன்மி] புண்ணிய வசப்படியே போற்று நிலைவந் தெய்துப்
புனித நெறி யுணர்த்தும் - கன்மபுருஷா; (புனித)
மண்ணும் பெண்ணும் பொன்னெனும் மணமதனை மாற்றுது
வசப்படுவ தசாத்தியம் - கன்மபுருஷா; (வசப்) (38)

[கன்மி] முப்பசையாம் புலியின் வாய்க்கிரை யாகாது
முறையொன்று சொல்லவேண்டும்-தன்மபுருஷா (முறை)
எப்படி யாகினும் பிறவி கடல்கடக்க
யெளியேனைக் காக்கவேண்டும் - தன்மபுருஷா; (எளி) (39)

[கன்மி] ஏரிகரைமே லுள்ள கல்லைக் கீழே தள்ளுதல்
எளிதெனவே யுரைப்பார் - கன்மபுருஷா; (எளிதென)
பாரில் தேசிகன்றனயைப் பற்றிப் பிடித்துக் கொண்டால்
பற்றனைத்தும் பாழாகும் - கன்மபுருஷா; (பற்றனை) (40)

[கன்மி] ஆழ மறியாப்படிப் பாவப் பள்ளத் திறங்கி
அலைவதை தடுப்பரியார் - தன்மபுருஷா; (அலைவதை)
மேலைக்கொண் டெழுதற்போற் மெய்ஞ்ஞான மதனாலே
மேலாம் பத முண்டாமோ - தன்மபுருஷா; (மேலாம்) (41)

[தன்மி] பாசமதை யகற்றி பசு நிலையுங் கடந்து
பதியாகும் வரையினில் - கன்மபுருஷா; (பதியாகும்)
தேசயரு மானந்த சித்விலாசத்தின் காட்சி
சித்திப் பெறுவ தில்லை - கன்மபுருஷா; (சித்திப்) (42)

[கன்மி] முன்னஞ் செய்தவினையே தேகமது வந்ததாய்
முன்னோ ரெழுதினதேன் - தன்மபுருஷா; (முன்னோ)
சென்ம மல்லாது வொன்றை தெரிந்தெடுப்பது யெங்ஙன்
தெளிய வுணர்த்த வேண்டும் - தன்மபுருஷா; (தெளிய) (43)

[தன்மி] பாபம் மிசிரம் புண்ணியம் எனமூன்று வகையாகப்
பறைந்த தனுபவமே - கன்மபுருஷா; (பறைந்த)
சாபமதை யெடாமற் றூண்டி கடைப்பிடித்தாற்
றானே சுகம்வந்துறும் - கன்மபுருஷா; (தானே) (44)

[கன்மி] சாப கோப பாபங்க டான்வந்தாலு மவைகள்
தங்காப்படி செய்வதியார் - தன்மபுருஷா; (தங்காப்)
ஆபத் தறிந்துதவும அண்ணலிவர்தா னென்று
அறியுந் திறமுணர்த்தும் - தன்மபுருஷா; (அறியுந்) (45)

[தன்மி] தன்னைத்தா னுள்ளபடி தத்தஞ்செய்த அடியர்களைத்
தாங்குவான் குரு மூர்த்தி - கன்மபுருஷா; (தாங்கு)
உன்னைநீ யுள்ளபடி யுணர்ந்து தேசிகன் கழல்
ஓதிசந்ததம் வாழ்வாய் - கன்மபுருஷா; (ஓதி) (46)

[கன்மி] ஓயாக் கவலையதி லோய்ந்துவோ ரிடங்கண்டு
உட்கார வேண்டுகின்றேன் - தன்மபுருஷா (உட்கார)
ஆயாமற்படி செய்த அக்ரமச் செயலெல்லா
மதோகதியாக்குமையா - தன்மபுருஷா; (அதோகதி) (47)

[தன்மி] பொடியணிந் தறகால பூசையதைச் செய்தாலும்
புண்ணியத்தின்படியே நேரும் - கன்மபுருஷா (புண்ணி)
அடியவர்க் கடிமைசெய் தாசீரதனைப் பெற்று
லானந்தம் வந்துசேரும் - கன்மபுருஷா (ஆனந்தம்) (48)

[கன்மி] ஆனந்தம் பெறும்படி யாதி காலந்தனிலே
அன்புசெய் திருந்திலனோ - தன்மபுருஷா; (அன்பு)
தாலமதிற் சனித்து சமுசாரப் பந்தமதாற்
றளர்ந்த தொழிவதெந்நாள் - தன்மபுருஷா; (தளர்ந்த) (49)

[தன்மி] சமுசார பந்தமதைச் சார்ந்துவனந்த நன்மைத்
தனை நடத்தினர் முன்னோர் - கன்மபுருஷா; (தனை நடத்)
அமுர்த முண்ணுதப்பிள்ளை பிழைப்பதரிதைப்போ
லருளின்றி யணுகாது - கன்மபுருஷா; (அருளின்றி) (50)

[கன்மி] அருளது வந்துவிட்டா லடியேன் சன்மக்கடலை
யகன்று பிழைப்பேனன்றோ - தன்மபுருஷா; (அகன்று)
இருளது நீங்காம லொளியெங்ஙன் காண்பதற்
கிசையு முண்மைப் புகல்வாய் - தன்மபுருஷா; (இசை) (51)

[தன்மி] ஆடியும் பம்பரமு மசைவது நிற்பதைப்போ
லலைமனம் நிற்கவேண்டும் - கன்மபுருஷா; (அலைமன)
ஓடியும் பாடியு முள்ள நிலைக்காணும
லுண்மை வெளிப்படுமோ - கன்மபுருஷா; (உண்மை) (52)

[கன்மி] வள்ளலைப் போலவென்னை வாழ்விக்க வந்தகுரு
மன்னினு லன்றோ சுகங்காண் - தன்மபுருஷா; (மன்)
உள்ளமெனு மாலயத்தி லுத்தமனைக் குடிவைத்து
ஓதி வணங்குவ தெந்நாள் - தன்மபுருஷா; (ஓதிவண) (53)

[தன்மி] தள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன் கடிவாளங்
கன்மத்திற் கியார்துணை - கன்மபுருஷா; (கன்மத்திற்)
அள்ளியே தான்முழுதுண்ட மலமதனை மற்றவ
ராசித்துக் கொள்வரோசொல் - கன்மபுருஷா (ஆசித்து) (54)

[கன்மி] கோடி தானத்தையொரு கொடுஞ்செய லழிப்பபோற்
கொண்டு வந்தேனோவினை - தன்மபுருஷா; (கொண்டு)
மாடியின் மேலிருந்துத் தானே விழுந்திறக்கும்
வசைமொழி வந்ததுண்டோ - தன்மபுருஷா; (வசை) (55)

[தன்மி] பழைய வினையானாலும் பற்றறுக்கும் படிதெய்வப்
பற்றதைக் கடைப்பிடிப்பாய் - கன்மபுருஷா; (பற்றதை)
விழையுநற் செயல்தன்னால் விமலன் கிருபைவைத்து
விஞ்ஞைசப் பதமருள்வார் - கன்மபுருஷா; (விஞ்ஞை) (56)

[கன்மி] பரமானந்த தியானம் பலிக்குந் திருமொழியைப்
பகரவே தயைசெய்யுந் - தன்மபுருஷா; (பகரவே)
வரமிலாம லொன்றும் வாய்ப்ப தருமையெனல்
மலைமே லிட்டதீபமாம் - தன்மபுருஷா; (மலைமே) (57)

[தன்மி] மலைமே லுள்ளவத்துவாந் தேனதைக் கண்டுபிடித்து
வாரியுண்ண லெளிதாமோ - கன்மபுருஷா; (வாரியுண்)
தலைமேல் மரணமெனுஞ் சாக்காடதை வெல்லாமல்
தலைவனை யறிவதெங்ஙன் - கன்மபுருஷா; (தலைவனை (58)

[கன்மி] தலைவனை யறியவுந் தனக்குளே யொடுங்கவுந்
தந்திரஞ் சொல்லவேண்டுந் - தன்மபுருஷா; (தந்திரஞ்)
வலைப்பட்ட மானது வேடனிடஞ் சிக்குண்ட
வாதைலயப்போல் நொறுக்குண்டேன்-தன்மபுருஷா (வா)

[தன்மி] பிடித்த பிடியைவிடாக் குரங்கெனும் மனத்தாற்
பிடாரி யெனத்திரிந்தாய் - கன்மபுருஷா; (பிடாரி)
குடித்தனஞ் செய்வதென தடித்தனத்திற் படிந்து
குணமின்றியே பாழானாய் - கன்மபுருஷா; (குண) (60)

[கன்மி] வையக வாழ்க்கையைய பொய்யெனக் கருதாமல்
மனப்பால் குடித்துக்கெட்டேன் - தன்மபுருஷா; (மனப்)
மெய்யை மெய்யாலறியும் விஞ்ஞை யதையிழந்து
வெகுளியைத் தீர்க்கவேண்டும்-தன்மபுருஷா; (வெகு) (61)

[தன்மி] சாதனை யின்றியொன்றைச் சாதிக்க முடியுமோ
தத்வமசி முடிவாம் - கன்மபுருஷா; (தத்வமசி)
பேதமபேதமெனு மிரண்டும் வேண்டாதநிலைப்
பெற்றவரே நல்லோராம் - கன்மபுருஷா; (பெற்ற) (63)

[கன்மி] வேதாந்த சித்தாந்த வேற்றுமைப் பார்த்ததினால்
விபரீதச் சிந்தையுற்றேன் - தன்மபுருஷா; (விபரீத)
பாதார விந்தமதைப் பற்றினே னிதனுளவைப்
பகரவே வேண்டுந்தநி - தன்மபுருஷா; (பகரவே) (63)

[தன்மி] வேதாந்த சித்தாந்த வேற்றுமை யென்பதெல்லாம்
விகற்ப நெறியோர்க்கொள்கை-கன்மபுருஷா; (விகற்ப)
பேதாந்தப் பேயர்கள் பிரமித்துப் பலபேசி
பெரும்பயனை யிழப்பார் - கன்மபுருஷா; (பெரும்) (64)

[கன்மி] எல்லாப் பொருளிடத்து மிறைவன் சொரூபகுணம்
இச்சையாய் வெளிப்படுமோ - தன்மபுருஷா; (இச்சை)
பொல்லாச் செயலதனுற புத்திகெட் டிதனுளப்
பொருளைப் பொருளாய்க் காணேன்-தன்மபுருஷா; (பொ)

[தன்மி] பகலை யிரவென்றெண்ணும் பாதகர் களைப்போலப்
பழிக்கஞ்சா மற்றிரிந்த - கன்மபுருஷா; (பழிக்கஞ்சா)
சுகமெல்லாந் துக்கமாய்த் தோன்றி கெடுக்குநாளிற்
றுணையெவ ருண்டுசொலாய் - கன்மபுருஷா; (துணை) (66)

[கன்மி] சத்து வொடுங்கியப்பின் தானனு பவித்ததெலாந்
தாங்க வகையுளதோ - தன்மபுருஷா; (தாங்கவகை)
சித்தமதைத் தெரிந்து சிறியேன் றனையாட் கொண்டாற்
சீரதைப் பெற்றுக்கொள்வேன் - தன்மபுருஷா; (சீர) (67)

[தன்மி] சுத்த பூமியதனிற் பிறந்தவரே மெய்ஞ்ஞானந்
துலங்க யெங்஡னும் வாழ்வர் - கன்மபுருஷா; (துலங்க)
பத்தியம் பரிகார மியாதும் வேண்டாமற் சர்வ
பரம தேசியாவார்கள் - கன்மபுருஷா; (பரமதேசி) (68)

[கன்மி] எல்லையில் லாதப்பொரு ளெனக்கு கைவசமாக
யென்னநான் செய்யவேண்டும் - தன்மபுருஷா (என்ன)
கொல்லைக் காட்டுநரி பல்லைக்காட் டியோடுதறபோற்
கோடியச்செய னீங்க்ஞுமே - தன்மபுருஷா; (கொடி) (69)

[தன்மி] பஞ்சத் துவாரமமனுஞ் சந்துபொந்து களையடைத்து
பஞ்சவர்னக் கிளியதனைக் - கன்மபுருஷா; (பஞ்சவர்ன)
சொந்தமாங் கந்தமெனு மனமாங் கூட்டினில்வைத்து
தோற்றமதைக் கண்டிருப்பாய்-கன்மபுருஷா; (தோ) (70)

[கன்மி] குரங்குத்தன் புட்டத்தை தானே மெச்சுதங்கர்
குவலயத்திலே திரிந்தேன் - தன்மபுருஷா; (குவலயத்)
விரதம் பக்தியறியா வீணனென்று யெனைக்கை
விட்டாற் பிழைப்பதில்லை - தன்மபுருஷா; (விட்டா) (71)

[தன்மி] உண்ண லுடுத்தலுக்கே வுழைத்துக் காலம்பாழாக
வொப்பிநீ கெட்டனையே - கன்மபுருஷா; (ஒப்பிநீ)
அண்ண லரனடியார்த் தம்முடன் சேர்ந்து பணிசெய்
தாளாகாமற் போகினை - கன்மபுருஷா; (ஆளாகா) (72)

[கன்மி] ஊழன்மலி பாபத்தை யோட்டி நலம்பெற்றிவ
ணோங்கிட தொண்டரைச் சேர்ந்தேன் - தன்மபுருஷா (ஓ)
வாழவே லைவக்காதுபலதன் மார்க்கக் குணத்தானீக்கி
வாட்டிட நொந்து வயர்ந்தேன் - தன்மபுருஷா (வாட்) (73)

[தன்மி] சேர்க்கை யியற்கையெனத் தேர்ந்து வலியவந்து
சென்மநோய்க் கொண்டிடுமே - கன்மபுருஷா; (சென்ம)
பார்வைப் பஞ்சடைந்து வார்த்தைக்கும் பஞ்சமாய்ப்
பாவையாய்ச் செய்திடுமே - கன்மபுருஷா; (பார்வை) (74)

[கன்மி] மண்குதிரையை நம்பி ஆற்றினீந்தினவன்போல்
மாயையால் மதிகெட்டேன் - தன்மபுருஷா; (மாயை)
விண்ணுமண் ணென்றுரும் வேளைக்காதரவின்றி
வெருளியைப் பெருக்கினேன் - தன்மபுருஷா; (வெரு) (75)

[தன்மி] தேக வாலயத்திற் சிதாகாஸ தேவதையை
சேவைசெய் திடவேண்டும் - கன்மபுருஷா; (சேவை)
மோக போக யோகங்கள் முத்தியதைத் தராது
மூப்பசை யகலாமல் - கன்மபுருஷா; (மூப்பசை) (76)

[கன்மி] எண்டிசையும் பணி யீசன் றிருவடிக்கு
யெந்நா ளடிமையாவேன் - தன்மபுருஷா; (எந்நா)
பண்டை வினையொழிந்து பரமானந்த சந்தோஷம்
பற்றுஞ் சுகமடைவேன் - தன்மபுருஷா; (பற்றுஞ்) (77)

[தன்மி] தத்துவக் குப்பையுஞ் சமயப் போராட்டமுடன்
சாதியாம வாதையகன்றால் - கன்மபுருஷா; (சாதி)
சித்த சாந்தியுமாகுஞ் சின்மய சொரூபத்தை
தெரிசிக்கும் வழியுண்டாகும் - கன்மபுருஷா; (தெரி) (78)

[கன்மி] அன்னிய மென்பவைகட் சொந்தமென வுழைத்து
அலையினிற் றுரும்பானேன் - தன்மபுருஷா; (அலையி)
மின்னிகரா யொடுங்கும் மித்தை யதைப்பெரிதாய்
விரும்பியே நாட்கழித்தேன் - தன்மபுருஷா; (விரும்) (79)

[தன்மி] அறிவை யறிவதனா லறியுந் திறமைவாய்ந்து
அறிவா யமர்ந்து நின்றால் - கன்மபுருஷா; (அறிவா)
குறிகுண மொன்றுமிலாக் குணசேகரப் பெருமான்
குடிகொண்டுன் னோடிருப்பன் - கன்மபுருஷா (குடி) (௮0)

[கன்மி] அழியாப் பொருளதுவந் தடியனுக்குக் கிடைத்தா
லதற்குமே லென்னவேண்டும் - தன்மபுருஷா; (அதற்)
பழிபாவ மொழிந்திட்டால் சனன மெடுப்பதில்லை
பற்றற்ற நிலையுய்வேன் - தன்மபுருஷா; (பற்றற்ற) (௮1)

[தன்மி] பூதமானாலு முண்ணப் போதுமா காணியென்பார்
பொத்தலை யடைப்பதற்கு - கன்மபுருஷா; (பொத்தலை)
காதங் காதம்பறந்து காணிகாணி தேடிவைத்தாய்
கண்மூடினா லியார்க்கு சொந்தம்-கன்மபுருஷா (கண்) (௮2)

[கன்மி] ஊரார் தனக்குழைத்து வூத்தைப் பிணத்தைக் கார்த்து
வூதாரியாகி நொந்தேன் - தன்மபுருஷா; (ஊதாரி)
பரராதி யனைத்தையும் பரசிவ வடிவமாய்ப்
பாராமல் வினையுற்றேன் - தன்மபுருஷா; (பாராமல்) (௮3)

[தன்மி] உள்ள வுளவறிந்து வூமையெனு மௌனியாய்
ஓம்! என்ற பிரணவத்துள் - கன்மபுருஷா; (ஓம்)
வள்ளலைக் கண்டானந்த வாரியில் மூழ்கினர்க்கே
வசமென் றுணர்த்தும் வேதம் - கன்மபுருஷா; (வச) (௮4)

[கன்மி] அனந்த சொரூபங்களா யளவில் மறைசுருதி
யாகவே மருண்டனனே - தன்மபுருஷா; (ஆகவே)
வனத்தனிற் காய்ந்தநிலா வண்ணம் பயனோராது
மாய்மாலஞ் செய்தலுத்தேன் - தன்மபுருஷா; (மாய்) (௮5)

[தன்மி] காசினியிற் சனித்து கடலிற் கலந்த சலங்
காணி லவைகளொன்றும் - கன்மபுருஷா; (சாணி)
ஆசிருட னாசானு மகப்பட் டுண்மையாராயி
லனைத்துஞ் சிவத்திலொடுங்கும்-கன்மபுருஷா (அனை) (௮6)

[கன்மி] கண்ணுங் காதுமயக்க கருத்து மதன்பினோடி
காலனுக் கிலக்கானேன் - தன்மபுருஷா; (காலனுக்)
எண்ணத்திற் களவில்லை யிடும்புக்குங் குறைவில்லை
யேழைமதியனானேன் - தன்மபுருஷா; (ஏழைமதி) (௮7)

[தன்மி] சாந்த பதவ்யோம தரிசனார்த்த சுபிஷ
  தகத்தகாயப் பிரகாசம் - தன்மபுருஷா; (தகத்த)
போந்த நெறியுட்பட்டு புகலரு மகத்துவப்
  புனிதவாழ் வடைகுவாய் - தன்மபுருஷா; (புனித) (88)

[தன்மி] எல்லாங் கடந்தசிவ மெனும்பழம் பொருளினை
  யெளியேன் காணவருள்வாய் - தன்மபுருஷா; (எளி)
வல்லா ரகத்தினிலே மன்னுஞ் சுடரொளியை
  வணங்குந் திறம்போதிப்பாய் - தன்மபுருஷா; (வண) (89)

[தன்மி] சற்குருவை நின்னைப்போல் தானினைந் தவமதித்த
  சண்டாளக் குணம்படைத்த - தன்மபுருஷா; (சண்டாள)
பொற்பூவுக்கு வாசனைப் பொலிதேவை நிகர்தன்மைப்
  பொருந்தி வாழ்கமாட்டாயோ-தன்மபுருஷா; (பொரு) (90)

[தன்மி] தனக்கு நிகரொன்றிலா சற்குருவை யடைந்தால்
  சனனமது வுண்டாமோ - தன்மபுருஷா; (சனனமது)
மனப்பா லதைக்குடித்து வயிற்றை தெய்வமாயெண்ணி
  மரணத்திற் காளானேன - தன்மபுருஷா; (மரண) (91)

[தன்மி] தாம்தாம் செய்தவினைத் தன்னையல்லாது வொன்றைச்
  சார்வதற் கிடந்தருமோ - தன்மபுருஷா; (சார்வதற்)
வீம்புக் கெடுத்தவுடல் விருதா கோஷ்டங்கட் செய்து
  வீணே யலுத்துக்கெட்டாய்-தன்மபுருஷா; (வீணே) (92)

[தன்மி] சாகா திருப்போமெனுந் தன்மையா லகங்கரித்து
  தாண்டவ மாடினனே - தன்மபுருஷா (தாண்டவ)
வேகா வுடலென்றெண்ணி வெந்து சாம்பராய்ப்போக
  விசாரம் பிடித்து நொந்தேன் - தன்மபுருஷா; (விசா) (93)

[தன்மி] அன்னை தந்தை சற்குரு அரசனுடன் சருவமு
  மாசானே விளங்குவான் - தன்மபுருஷா; (ஆசானே)
தன்னை யின்னவனென்றுத் தானுணரப் போதிக்க
  சற்குரு வேண்டும் பிரதானம் -தன்மபுருஷா; (சற்) (94)

[தன்மி] பிறர்த்துன்ப மதைக்கண்டு பெரிது துக்கமணைந்தேன்
  பின்பெனை கவனித்திலையே - தன்மபுருஷா; (பின்)
மறம்புரிந் திடுக்கணால் மாளா சஞ்சலத்திற்கே
  மனிதனாகப் பிறந்தேன் - தன்மபுருஷா; (மனித) (95)

[தன்மி] பிறந்த பிறவிக்கேற்றப் பயனடை யாமற்போனு
பேய்க்கும் நமக்கென்பேதம் - தன்மபுருஷா; (பேய்க்)
அறம்பொரு ளின்பம் வீடு நான்குங்கை வரவந்தா
லகண்ட சொரூபமாவாய் - தன்மபுருஷா; (அகண்) (96)

[தன்மி] கரண வாதையினாற் கண்கலக்கங் கொண்டு
காலங்கட் போயினவே - தன்மபுருஷா; (காலங்கட்)
சரணடைந்தே னுன்றனை தமியேன சடைத்தீசறஞ்
சன்மார்க்கந் தனைப்போதிப்பாய்-தன்மபுருஷா; (சன்) (97)

[தன்மி] திரிகரண சுத்தியாய்ச் சிதம்பரமாந் தேகத்துட்
சிவானந்தனை வைத்தேத்து - தன்மபுருஷா; (சிவானந்த)
அரிதாம் ஓம் பிரணவ! வமலன் சொரூபநிலை
யமர்ந்து சுகித்திருப்பாய் - தன்மபுருஷா; (அமர்ந்து (98)

[தன்மி] கோத்திர மதுவிளங்குங் குணம்படைத்து வதீதக்
குன்றின்மே னிற்பதெப்போ - தன்மபுருஷா; (குன்றி)
தாத்திரை மயலெலாந் தனதென்பதை மறக்குந்
தந்திரம் போதித்தாற் புண்யம் - தன்மபுருஷா; (தந்) (99)

[தன்மி] மெய்வாய்கண் மூக்குச்செவி மேவியதா லுண்டமணம்
வினைக்கொண் டுருவானதே - தன்மபுருஷா; (வினைக்)
செய்யுஞ் செய்கையுமற்று செயலற்று வினைமறக்குஞ்
சிந்தையுண் டாகவேண்டும் - தன்மபுருஷா; (சிந்தை) (100)

[தன்மி] ஆற்றிற் கரைத்தபுளி யாகவெ னாசைக
ளனைத்துங் கெட்டிடுமோசொல் - தன்மபுருஷா; (அனை)
கூற்றனெனு மரணங் கொள்ளைக்கொண் டெனையுண்ணக்
கொழுக்கத் தின்றுநாட் போச்சு-தன்மபுருஷா; (கொ) (101)

[தன்மி] உண்ண லுடுத்தலிலே அனுபவித்த தெதுவோ
உனது பிராப்தியதுவே - தன்மபுருஷா; (உனது)
கண்ணைப் பாதுகாக்கல்போல் கருத்துடன் சேர்த்தவைகட்
கடன் தந்தோன் வாங்கியுண்பான்-தன்மபுருஷா; (கட) (102)

[தன்மி] அதுவிது அங்குமிங்கு மெனமலைத் தோடியோடி
அந்தகாரத்தி லாழ்ந்தேன் - தன்மபுருஷா; (அந்தகா)
சதுர்வித சாதனையு மொன்றேனுஞ் செய்யாது
சழக்கினால் வீணானேன் - தன்மபுருஷா; (சழக்கி) (103)

[தன்மி] சாதனை யெதுவரைத் தான்கை வரவில்லையோ
சனனங் கடைத்தேறுது - கன்மபுருஷா; (சனனங்)
ஓதும் வேதகீதமு மூனுறக்க மிவைக
ளொன்றும் பயன்றராது - கன்மபுருஷா; (ஒன்றும) (104)

[கன்மி] ஊனுதிரக் குப்பைதா னேகோ அன்னமயத்தோ
டொளித் திருப்பதே சீவன் - தன்மபுருஷா; (ஒளித்)
நானிவை யின்றிசேக நடமாடுவ தெவ்வணம்
நவில வேண்டு முளவை - தன்மபுருஷா; (நவில) (105)

[தன்மி] தனையறிந்து மறந்து தனதென்பது மறந்து
தானுனே சானுகி - கன்மபுருஷா; (தானுனே)
வினை யென்பது மகன்று வித்தினி விளையாப்படி
வித்தகனுகவேண்டுமே - கன்மபுருஷா; (வித்தக) (106

[கன்மி] உட்சுவ ருளிர்ந்திட புறச்சுவர் தனைப்பூசி
உலுத்தனுய் மகிழ்வுற்றேன் - தன்மபுருஷா; (உலுத்த)
தொட்டால் பொட் டெனவிழுந் தோற்பையைத் தினங்கழுவி
சொந்தம் பாராட்டி னைந்தேன் - தன்மபுருஷா; (சொந்த)( )

[தன்மி] பெரும் பெயரைப் படைத்து பேய்போல் தனத்தைச் சேர்த்து
பிண்டம் பிணமானதே - கன்மபுருஷா; (பிண்டம்)
ஒருவாமற் படியுனை யுறவாடி வந்தசெலா
மொன்றுந் துணைவராதே - கன்மபுருஷா; (ஒன்றுந்) (108)

[கன்மி] பொருளிலா வவத்தையைப் பொருளென் றுணர்ந்துநாள்
போனதே வயதெல்லாம் - தன்மபுருஷா; (போனதே)
மருள்கொண் டருளிழந்து வையாளிக்கு வாகார
மானேனெனதூழ் வினை - தன்மபுருஷா; (ஆனேனென)

[தன்மி] எல்லாமா யாவுமா யியங்கியு மியக்காம
லிருக்குஞ்சத் துணர்ந்தாயோ - கன்மபுருஷா; (இருக்குஞ்)
சல்லாப லீலையிற் சந்தோஷங் கொள்வதைப் போற்
சத்தனு டின்பங் கொண்டாயோ - கன்மபுருஷா; (சத்த)()

[கன்மி] பரமானந்த வானந்தம் பலிதமுற் றிடவொரு
பக்குவஞ் சொல்வதெந்நாள் - தன்மபுருஷா; (பக்குவஞ்)
இரவியினுங் களங்க மிருக்கு மென்னைச் சான்று
யேற்றுத் திரிந்தனனே - -தன்மபுருஷா; (எற்றுத்) (111)

[தன்மீ] உப்பு சலத்தினாலே கரைவதை கிகராக
ஸூழ்நசை நசிக்க வேண்டும் - தன்மபுருஷா; (ஸூழ்நசை)
அப்பு வினா லழுக்கு வகலல்போல வண்ணலி
லருளாண் சுத்தமாவாயோ - தன்மபுருஷா; (அருளாண்) ()

[தன்மீ] சித்த சுத்த மில்லாமற் செய்யும் பூசையும் பத்தி
சிறிதும் பயன் படாதே - தன்மபுருஷா; (சிறிதும்)
எத்தவத்தினு மன மொன்றித் திருந்த தானா
லியாவுந் தருமென்பாரே - தன்மபுருஷா; (இயாவும்) (113)

[தன்மீ] அகண்ட பரிபூரண வமலன் றிருவடிக்கு
ஆளாக வேண்டுஞ் சொன்னேன் - தன்மபுருஷா; (ஆளா)
பகரரிய மெய்ஞ்ஞானப் பாலதை யுமையாள் தரப்
பருகி சுகித்தனலம் - தன்மபுருஷா; (பருகி) (114)

[தன்மீ] சத்த சாகரம் போற்று சாங்க பசவ்யோமத்
தன்மையைக் கூடும்வழிசொல் - தன்மபுருஷா; (தன்மை)
பத்த ரகததினிலே பரிவேட்டை யாடிவரும்
பட்சமென்பால் வந்திடுமோ - தன்மபுருஷா; (பட்ச) (115)

[தன்மீ] சொச்சொரூப முடனே சுக சொரூப மானது
தோன்றினுங் கடைத்தேறலாம - தன்மபுருஷா; (தோன்)
அச்சொரூபத் துடனே யணுகி யானந்த மாஞ்சொ
பான முத்திரையடைவாய் - தன்மபுருஷா; (ஆனமுத்) (116)

[தன்மீ] மானாபி மானமெனு மயக்கப் புலிவாயினில்
மங்கியிங்கு வாடுகின்றேன் - தன்மபுருஷா; (மங்கி)
சேனா சமுத்திரம் போற் றிரண்டு வந்தே சூழ்ந்திடுஞ்
செனன மெப்படி நீங்கும் - தன்மபுருஷா; (செனன) (117)

[தன்மீ] பொய்யதற்குக் காலில்லாப் போனப்போழ்தும் பொருளாய்ப்
பொலிந்துற வாடிக்கெடுக்கும் - தன்மபுருஷா; (பொலிந்)
மெய்யைக் கொண்டுமெய்யதை யழியா விரதங்கொண்டால்
மேலாம் பதங்கைக்கூடும் - தன்மபுருஷா; (மேலாம்) (118)

[தன்மீ] சர்க்கரை யென்றெழுதி சுவைக்கின் சுவைதரா
சங்கற்பத்தால் மலைத்தேன் - தன்மபுருஷா; (சங்கற்)
வர்க்கத்தினிற் கலந்து மாற்றானைப் போன்ற மனம்
வஞ்சத்தினி லிழிந்தேன் - தன்மபுருஷா; (வஞ்சத்) (119)

[தன்மி] தாமரைக் கீழிருந்துத் தேனையுண்ண வகையற்ற
தவளைக்கு சரியொத்த - கன்மபுருஷா; (தவளைக்கு)
பாமரர்ப்போல் பண்டிதரு மிருப்பா ருணர்வதற்கு
பகுவுவந் தெரிதல்வேண்டும் - கன்மபுருஷா (பக்கு) (120)

[கன்மி] ஊனைச் சுமந்துநின்ற வூனுக்கோர்பொய்க் கதைக்கூறி
வுலுத்துப் ப்பா தற்காளானேன் - தன்மபுருஷா; (உலுத்)
மானைப் பிடிப்பதற்குப் பூனையைக்காட்டி யழைத்தால்
வசப்படுவ தெங்ஙனம் - தன்மபுருஷா; (வசப்படுவ) (121)

[தன்மி] சரியிரோ மென்பதனைச் சரியுளோ மென்றந்தோவீண்
சமத்காரம் பேசுகின்ற - கன்மபுருஷா; (சமத்காரம்)
பிரிவினை யுளக்காலம் பேசாது வந்துக்கொல்ல
பெரிதுணரா தென்னவோ - கன்மபுருஷா; (பெரி) (122)

[கன்மி] காய்ந்தசரு கினுந்தாழ்ந்த யிலையைப் பறிக்காவண்ணங்
கற்பனை யுண்டோ யில்லையோ - தன்மபுருஷா; (கற்ப)
ஆய்ந்திடுநா ளதிற்சர்வ அசரமுஞ் சரந்தனக்கு
ம்மைநதிடும் பாயப்புண்ணியம் - தன்மபுருஷா (அ) (123)

[தன்மி] உலர்ந்தபுல் லரிசியை யுண்டுதபஞ் செய்தவர்பா
லோகோ அர்ச்சுனன் போனதென் - கன்மபுருஷா; (ஓ)
புலனவிழச் சொல்லாமல் மறைந்துவந்து மாயனிடம்
போற்றிகீதைக் கேட்டதைப்பார் - கன்மபுருஷா; (போற்)

[கன்மி] சந்துவழியி லிந்திரிய னொந்து வுவந்து சனனந்
தன்னை யெடுப்பதல்லவோ - தன்மபுருஷா; (தன்னை)
அந்தரங்கமாய்ப் புலானை யழிப்ப தொழிக்குறிலை
யறிய வுணர்த்தவேண்டும் - தன்மபுருஷா; (அறிய) (125)

[தன்மி] இந்திரியத்தைக் கொல்லானும் யின்னொரு தன்போலுருவை
யெடுக்காமல் மறுத்தானையே - கன்மபுருஷா; (எடுக்கா)
அந்தரர் தேவர்கண்முத லவனியி லுளசர்வமும்
ஆனந்தங்கொண்டே வணங்கும் - கன்மபுருஷா (ஆன) (126)

[கன்மி] தன்னைத்தா னறிவதுந் தலைவனைக் கலப்பதுவுஞ்
சாட்சிய மிதுவாகுமோ - தன்மபுருஷா; (சாட்சிய)
உன்னைநீ யறிவாயானு லுனக்கோர் கேடில்லையென்
வுரைத்த வுளவறிந்தேன் - தன்மபுருஷா; (உரைத்த) (127)

[தன்மி] காதற்றுப் போனமுறி கட்டிவைத்தா லென்னபயன்
கருத்தவிழ்ந்துப் பாழானல் - கன்மபுருஷா; (கருத்)
வாதற்று மயக்கற்று மரணவா தைகளற்று
மனமொத்து நிற்றனலம் - கன்மபுருஷா; (மன) (128)

[கன்மி] வாமப்பாலைக் குடித்து காமப்பாலைச் சுருக்கி
வயதிளமை யடைந்தார் - தன்மபுருஷா; (வயதிளமை)
கேம நியமநெறி நித்தியானந்த வைபவ
நிலைப்ப தெப்படிசொல்வாய்-தன்மபுருஷா; (நிலை) (129)

[தன்மி] புண்ணியம் வந்தபடி பொசிக்குங் குழந்தையைப்போல்
புனிதர் வசித்திருப்பார் - கன்மபுருஷா; (புனிதர்)
மண்ணும விண்ணுமொன்றாக மனிதா தேவரொன்றாக
மனனவே வணங்குவர்காண்-கனமபுருஷா; (மன) (130)

[கன்மி] பித்தரும் பேயருமபோல பிரபஞ்சத்தில் வசித்தாந்
பெரிதுணர வல்லாரியார் - தன்மபுருஷா; (பெரிது)
பத்தனைப் பத்தனுஞ்சிவ முத்தனை முத்தனுங்காண்பார்
பக்குவப் பயியினலே - தன்மபுருஷா; (பக்குவ) (131)

[தன்மி] புகையைக் கொண்டுநெருப்பைப் புகலுமார்க்கமுண்டு
பூத்சதினு காண்பதுண்டு - கன்மபுருஷா (பூசதி)
அகத்தி னழகனை முகத்தி லறிவனைசபோ
வருளாளாக் ககப்படும - கனமபுருஷா; (அருளா) (132)

[கன்மி] அன்பே சிவமதுவா யணுகி யானந்தங்கொண்டா
லகறதும்ம லதுகுறை - தனமபுருஷா; (அசற்கு)
வன் மனக் குரங்கைக்கட்ல வசப்பட் டொடுங்கத் தந்திர
யூார்க்கந் தனையுரைப்பாய் - தன்மபுருஷா; (மார்க்) (133)

[தன்மி] பாவனைக ளெலாங்கடந்து பாவாதீதத்தினின்று
பரிபூரண மாகினல் - கன்மபுருஷா; (பரிபூரண)
மூவகையாஞ் சொரூப மூர்த்தங்குரு மூர்த்தியாக
முனவர் தருட்கொடுக்கும் - கன்மபுருஷா; (முன்) (134)

[கன்மி] காந்தமது யிரும்பைக் கனக்க யிழுப்பதைப்போல்
கடவுளெனை யிழுத்தானனல் - தன்மபுருஷா; (கடவு)
சாந்த தெய்வத்தைக் கண்டு சைதன்ய நிழலிலண்டி
சச்சிதா னந்தனகுவேன் - கன்மபுருஷா; (சச்சி) (135)

[தன்மி] பனங்காட்டு நரிதானுஞ் சலசலப்புக் கஞ்சாத
பழமொழி கேட்டிலையோ - கன்மபுருஷா; (பழமொழி)
முனஞ்செய்த வூழ்வினை மூண்டுவந் தனைக்கெடுத்தால்
முத்தரேனு மென்செய்குவார் - கன்மபுருஷா; (முத்) (136)

[கன்மி] நல்லோர் குரு பெரியோ ரடியர் தரிசனத்தா
னன்மைய துண்டாகாதோ - தன்மபுருஷா; (நன்மை)
சொல்லரிய மெய்ஞ்ஞானச் சொரூப தேசிகர்மொழி
சுகமனைத்துந் தராதோ - தன்மபுருஷா; (சுகமனைத்) (137)

[தன்மி] ஆங்கால மதிலறிவா யண்ணலின் பணிபூசைகொண்
டன்பு செய்யாதிருந்து - கன்மபுருஷா; (அன்பு)
சாங்காலஞ் சங்கரா வெனில்வருமோ தருமம்
சங்கட சஞ்சலந்தானே - கன்மபுருஷா; (சங்கட) (138)

[கன்மி] தானென்பதை மிதித்துத் தன்னுள்ளன்பைப் பதித்து
சருவ மொன்றாய் சிந்திக்க - தன்மபுருஷா; (சருவ)
ஊனுறக்க மொன்றிலா வுள்ள ஞானப்பாலுண்ணு
முபாய முரைத்தாற் புண்ணியம்-தன்மபுருஷா; (உபா) (139)

[தன்மி] ஆசை யெனுஞ்சங்கு மகங்கார மதயானை
யடங்கினால் கடைத்தேறவாய் - கன்மபுருஷா; (அடங்)
பூசை செபமந்திர போததான மோகத்தையோர்
பொய்யு மூர்க்கமுங் கொல்லும்-கன்மபுருஷா; (பொ) (140)

[கன்மி] அடங்கும் பாம்பென வென்னை யடக்கிசீர்ப் படுத்திட
யாரை நம்பித்தொழுவேன் - தன்மபுருஷா; (யாரை)
தொடரும்பே யெனக்கன்மந் தொலையாப்படி வாதிக்குந்
தொல்லையற் றுற்பிழைப்பேன்-தன்மபுருஷா; (தொல்லை)

[தன்மி] உள்ளங்கைக் கனியெனக் கண்டதெல்லா மெதுவா
யொழித்துன்னை நீகண்டால் - கன்மபுருஷா; (ஒழித்)
வள்ளல் குருவுன்றன்பால் வலியவந் தருட்சுரந்து
வாழ்விக்க செய்வனுண்மை - கன்மபுருஷா; (வாழ்) (142)

[கன்மி] சொல்லிய வண்மைச் சுருதியினந்தரங்க
சூட்சத்தை சொல்லும் புண்ணியம்-தன்மபுருஷா; (சூட்)
வல்ல சிவபெருமான் மன்னுங் குருமூர்த்தியாய்
வருங்காலந் தெரிவனோ - தன்மபுருஷா; (வருங்) (143)

[தன்மி] சனகாதி நால்வருக்குந் தகைமைசிறை வாதவூரர்
தமிழ்வேத வாசகர்க்கும் - தன்மபுருஷா; (தமிழ்)
அனந்த ஞானசொரூப வமலன் தட்சணாமூர்த்தியா
யன்றவந்த தண்மையைக்காண்-தன்மபுருஷா (அன்) (144)

[கன்மி] உண்மையைக் கடைப்பிடிக்கு முத்தம நெறிபோதிக்கு
முயர்வா முருவங்கொண்ட - தன்மபுருஷா; (உயர்)
பண்மலர்ச் சூடியுன் றன் பாதத்தை முத்தமிட்டேன்
பரமன் றனக்காளாக்கும் - தன்மபுருஷா; (பரம) (145)

[தன்மி] சொல்லாமற் சொல்லுமிடஞ் சுயஞ்சோதித் தன்னைக்கண்டாற்
சொக்கி வயர்ந்துப்போவாய் - தன்மபுருஷா; (சொக்கி)
கல்லாமற் கற்றவரே காரணமாம் ஓம் பிரணவக்
காட்சி யதிற்கலந்தார் - தன்மபுருஷா; (காட்சி) (146)

[கன்மி] ஆத்ம விசாரணையு மந்தரங்க போகமு
மைவரொடுகரு மந்திரமும் - தன்மபுருஷா; (ஐவரொ)
சூத்திர முடனுமிணத்திர சுத்தசைவ சித்தாந்த
சூட்சங்கண் டின்பமுற்றேன் - தன்மபுருஷா; (சூட்) (147)

[தன்மி] அளவில்லா குருமூர்த்தி யாகியெழுந்து பக்குவிக்
கனுபவங் காட்டினரே - தன்மபுருஷா; (அனுபவங்)
உளவறிந் துள்ளத்தி லுத்தம சிவானந்தனை
உட்கார வைத்துத் தொழுவாய் - தன்மபுருஷா; (உட்கா)

[கன்மி] தெரிவரிய பரம ரகஸ்ய மனோலயத்திற்
சித்தியடைந்தே னுன்னால் - தன்மபுருஷா; (சித்தி)
பரிவுவைத் தெனையாளப் பாரில்வந்த குருவேநின்
பாதம் சந்ததம் வாழி - தன்மபுருஷா; (பாதம்) (149)

[தன்மி] குணங்கொண்ட சிவமன்றி குருமூர்த்த மெங்குமிலைக்
கும்பிட்டு சாந்தியடைவாய் - தன்மபுருஷா; (கும்பிட்டு)
மணமலரும் பொன்னொளி மன்னுவநேர் மங்களமாய்
வாழ்ந்து சுகித்திருப்பாய் - தன்மபுருஷா; (வாழ்ந்) (150)

[கன்மி] தவத்தள வாகவந்து சைவனு யொன்றித்திருக்க
சமயமதை வகுத்த - தன்மபுருஷா; (சமயமதை)
சிவப்ரகாச தேசிகன் றிருமொழியா லெஞ்ஞான்றுஞ்
சீர்பெற்று வாழிபோற்றி - தன்மபுருஷா; (சீர்பெற்) (151)

ஞானாதிக்ய ஆனந்தக்களிப்பு.

சிவ சிவ சிவ சிவானந்தம் – சர்வம்
சிவமயஞ் சிவமயஞ் சின்மயானந்தம்; (சிவ)

(க) நவத்தன வாகவே சன்மம் – வந்து
சங்கற்ப வாசனை யெனும்பல கன்மம்
இவணலைந் திடலாலே தன்மம் – தன்னை
யெழிலுற வுணர்ந்திடி லிலையாய வன்மம்; (சிவ)

(உ) கருணைப்பிர வாகத்தைச் சார்ந்து - ஞானக்
கண்ணதைப் பெற்றவ ரூழ்வினைத் தீர்ந்து
பெரும்பய னிவையெனத் தேர்ந்து - நலப்.
பிர்மானந்த சுகமான திலார்ந்த; (சிவ)

(ங) எங்குந் ததாகார மாகி – விளங்கு
மிறைபவனு மீசன் றனதுண்மை யூகி
தங்கும் பேரின்பங்கொள் தேகி – என்றுஞ்
சைதன்ய சச்சிதானந்தனும் யோகி; (சிவ)

(ச) நகத்த காயப் பிரகாசம் – கொண்டுத்
தானாகி நிற்பது மாபிரயாசம்
சுகதுக்க மெனுமவ லேசம் - தன்னைச்
சூழாது நின்றுலொடுங்கு மும்பாசம்; (சிவ)

(ரு) சூட்சும வாக்கையைக் கொண்டு – எங்குந்
துலங்குவதே பூர்வப் புண்ணியங் கண்டு
காட்சியு மாட்சியும் விண்டு - அந்தக்
கரணங்கள் வாதை முடக்கி சீரண்டு; (சிவ)

(சு) சாந்தமெனுங் கடவு டன்னை - உன்னுள்
தான்கண்டு அருட்பெற்று லந்தோரீ முன்னை
சேர்ந்த வினைமாயும் பின்னை – சென்மஞ்
செனிக்காது வேண்டியதொன் றுண்டோ சன்னை (சிவ)

(எ) பரவெளி தன்னையே பார்த்து - உலகப்
பற்றென்ப தொருக்காலு மணுகாது தீர்த்து
கர சரணந் தனையொன்றாய் சேர்த்துச் – மாயக்
கடலதைக் கடந்து வானந்தப்பூப் பூர்த்து; (சிவ)

(அ) எல்லாந் தனதுரு வாக - மினார்
தெண்ணுதலே ஞானச் சாதன போகம்
செல்வத்துட் செல்வமதாக - போற்றிச்
சிந்தாகுலந் தீர்ப்பதுவே விதேகம்; (சிவ)

(கூ) ஆனந்த மாமின்ப வீடு - தன்னை
யடைந்தார்க்குத் திரிலோகத் தினுமுண்டோ வீடு
ஞானானந்த மன்னு நாடு - தன்னில்
நம்பனோடு கலந்தேநீ கூத்தாடு; (சிவ)

(ய) தேகாதி யந்தமு மோகம் - என்றுஞ்
சித்தத்தைக் கெடுத்திடு மும்மல போகம்
சாகா திருப்பதே யோகம் - இதைச்
சமரச ஞானத்தா லறிதல் விவேகம்; (சிவ)

(யக) எங்கு நிறைந்திடு மத்தன் - தன்னை
டிணங்கி வாழ்ந் தழியாம லிருப்பவன் முத்தன்
மங்காத வொளிகொட் பிரசித்தன் - நித்ய
வரம்பெற ஞான்றுஞ் செபஞ் செய்வோன் பத்தன்; (சிவ)

(யஉ) காரணம் பொன்னது வாகும் - அதிற்
காரியம் பணியெனப் பலவுரு வாகும்
பூரணந் தெரிந்திட லாகும் - இதிற்
பொய்மெய் யிரண்டு மில்லாதோடிப் போகும்; (சிவ)

(யங) சுத்த சித்தந்தானே பக்தி - இதைச்
சோராம னடத்தி னிற்பதுசிவ முத்தி
சத்தியஞ் சாந்தமே புத்தி - நிலைச்
சார்ந்து போகிப்பதே கைகண்ட சித்தி; (சிவ)

(யச) ஐம்பூதக் கள்ளரைக் கூடி - ஐயோ
அனுபவித்த மித்தை அளவில்லாக் கோடி
வம்பான நெறியைக் கையாடி - அதனால்
வாங்கியுண்ட மாய மலமதைச் சாடில்; (சிவ)

(யரு) பலகோடி சாத்திரங் கற்றாலும் - அதன்
பயன்றனை யடைவதா யெண்ணி யுற்றாலும்
குலங்கோத்திரஞ் சொல்லி விற்றாலும் - வருங்
கூற்றனுக் குறவில்லை தனங்கனம் பெற்றாலும்; (சிவ)

(௰௬) எல்லாஞ் சிவமென யெண்ணு - சதா
யிருதயந் தனில்வைத்து மனப்பூசைப் பண்ணு
பொல்லாதக் குணத்திற்கேன் கண்ணு - நாளைப்
போவோர் பள்ளத்திற் றள்ளுவார் மண்ணு; (சிவ)

(௰௭) நீறில்லா நெற்றிப்பா ழென்றார் - முன்னோர்
நேரறியா நீசர்ப் பூசாம னின்றார்
மாறியே பலமார்க்கஞ் சென்றார் - சைவ
மகத்துவந் தெரிந்தவர் மரணத்தை வென்றார் (சிவ)

(௰௮) சிதம்பர மென்பதே தேகம் - அஷ்ட
சித்திக ளடைந்திருப்பது சூக்ம தேகமே
சதமுஞ் சாந்தமுந் தெய்வம்ஏகம் - எனத்
தானறியார்க் கேது முத்தியின் பாகம்; (சிவ)

(௰௯) வாசனையால் வீடு கட்டி - மாய
வல்லியி னுடன்கூடி சீவனை முட்டி
பாச பந்தத்தை யூழ்க் கிட்டி - படும்
பரிதாபந் தனைவிட்டு யென்று மதட்டி; (சிவ)

(௨௰) சச்சிதா னந்தத்தை நாடு - சர்வந்
தானாகித் தானாகுந் தானான வீடு
உச்சிமேல் வைத்துநீ பாடு - உண்டு
உண்ணும லுறங்கியு முறங்காமனீடு; (சிவ)

(௨௧) அண்டமும் பிண்ட மொன்றாச்சு - இதை
யறியார்கட் பேசுவார்க் கோடிவீண் பேச்சு
பிண்டம் பிணமாக மூச்சு - ஒரு
பேச்சு மில்லாதோடக் கண்டிடிலேச்சு; (சிவ)

(௨௨) கர்ப்பூரம் உப்பு மொன்றாக - நிறங்
காணப்பட்டாலுங் குணம் வேறதாக
பர்க்குணன் முனங்கீதையாக - கிருஷ்ணன்
பகர்ந்தது லறிந்தாலும் புண்ணிய விதேகம்; (சிவ)

(௨௩) மலைநாடு தீர்த்தங்கள் தேடி - சதா
வந்தனை வழிபாடு செய்வார்கட் கோடி
நிலையான பொருட்கண்டா லோடி - வீணே
நியமஞ்செய் தழிவாரோ மலைப்புச்சொல் பாடி; (சிவ)

(௨௪) அறிவினா லறிவதை யறிந்து - தனக்கு
ளதீத வோங்கார வந்தரங்கந் தெரிந்து
வெறியுண்டு நெறிகொண்டுத் திரிந்து - மௌன
வித்தையிற் சிறந்து சித்துபலப் புரிந்து; (சிவ)

(௨௫) தன்னை யறிந்தவன் ஞானி - பொய்
சாத்திரங் கோத்திரஞ் சொல்வோ னஞ்ஞானி
மன்னுந் தியானமுள்ளோன் தியானி - தேக
வரலாற்றைக் கண்டுணர்வோ னபிமானி; (சிவ)

(௨௬) செய்யுஞ் செய்கையு மற்று நில்லு - வினைச்
சேர்வதாய்க் கண்டா லுடனே அதைக்கொல்லு
ஐவர்கட் சேட்டையை வெல்லு - சைவ
அந்தரங்க முணர்ந் ததன்வழி செல்லு; (சிவ)

(௨௭) சிவசிவ வென்பதே மந்த்ரம் - மனஞ்
சித்திப் பெறுதற்கு வேண்டும்பல தந்த்ரம்
தவசிக்கு யேன்பல யந்திரம் - மாயச்
சகடையர்க்குத் தானே அலைகட் சுதந்த்ரம்; (சிவ)

(௨௮) உன்னை நீ நல்லவனுக்கு - வினை
யொழிந்தா லனைத்தையு முனக்கடிமை யாக்கும்
மின்னிகர் வாழ்வதை நீக்கு - வெகுளி
வித்தாரம் டம்பம் வேண்டாநெறி நோக்கு; (சிவ)

(௨௯) மரணமாஞ் சஞ்சலக்கூற்று - வந்து
வாதைக் கொடாப்படி வுன்னை நீ மாற்று
தரணிமீ துண்மையைச் சாற்று - வேத
தத்வமசி முடிவைக் கண்டுப் போற்று; (சிவ)

(௩௰) உள்ளமுங் கள்ளனுமாக - கடத்து
ளுறவாடுஞ் சீவனுஞ் சிவம்விட்டுப் போக
தள்ளாது சுடலையில் வேகக் - கண்டு
தனையறிந் தடங்குஞ்சி ரடைதலே யோகம்; (சிவ)

(௩௧) நல்லவன் ஓம் நமசி வாயன் - சதா
நம்பியே தொழுதார்க ளுளம்வாழு நேயன்
சொல்லுதற் கரியமெய்த் தூயன் - சுழுச்சியிற்
றூங்காமற் றூங்கிச் சுகந்தரு முபாயன்; (சிவ)

(கஉ) இகபர சாதன மென்ன - முன்னே
ரெழுதியே காட்டிபல சாத்திரஞ் சொன்ன
சுகதுக்க கன்மங்கள் மின்ன - அதைத்
தொடராது சிவஞானு ஊக்கமுள் மன்ன; (சிவ)

(கஙு) சந்தேகந் தெளிந்தநற் சிங்கம் - தனக்குத்
தாயாய்வந் தமுதூட்டுஞ் சிவஞானத் தங்கம்
பந்த நீங்கார்க் கென்றும் பங்கம் - உண்மைப்
பதம்பெற வேண்டியே கூடேநற் சங்கம்; (சிவ)

(கச) அழியா வரந்தனைப் பெற்ற - மண்ணு
ளடங்காம லியாரிருந்தார் யோசி சற்று
பழிபாவ மிடிகளை யற்று - நிலைப்
பற்றிப் பிடித்தாலு மூகலுமே முற்றும்; (சிவ)

(கரு) வாழ்வையுந் தாழ்வையு நோக்கி - உலக
மாறாட்டந் தனக்கே வுனையடிமை யாக்கி
ஆழப் பள்ளந் தனிற் றாக்கி - நாளை
அப்பப்பா போடுவா ரவனியோர் நீக்கி; (சிவ)

(கசு) உத்தம வழிதனை விட்டு - பல
வூருராய்த் திரிந்தனையே புத்திக் கெட்டு
எத்தனை மகிழ்ந்தாலுஞ் சொட்டு - உனக்
கிருக்கு மல்லாது விடாதூழ்க்குட் பட்டு; (சிவ)

(கஎ) துன்பமே நரகம தாகும் - நிலையைச்
சொல்லாது சொல்லு நெறிவிட்டாற் போகும்
இன்பமே மோட்சம தாகும் - சிவனை
யிழந்தப்பின் காண்பது வீண்கதை யாகும்; (சிவ)

(கஅ) தன்னுடன் றலைவனை வுய்யும் - வழி
சாதித்துக் காட்டுதலே அது சைவம்
மன்னனிற் பவன்சைவன் மெய்யும் - சிவம்
மலினமுற் றடையுநாட் சமயநேர் செய்யும்; (சிவ)

(கசு) பழையக் கொள்கைகடனை நீங்து - உண்மையைப்
பற்றிபற் றற்றலது சைவப் பாங்கு
நுழையாது நுழையுஞ் சேர்த்தாங்கு - குரு
நுண்ணிய வொருமொழியா லென்ற மோங்கு; (சிவ)

(௪௰) பரமானந்த மது சந்தோடம் - தன்னைப்
பாராமற் பார்த்து மகிழ்ஞான வோடம்
காத்திட்பொருட் கண்டால் வேடம் - பலக்
காட்டார்கள் காட்டுவா ரறிவில்லா மூடம்; (சிவ)

(௪௧) மறைவானப் பொருளொன்று மில்லை - உன்
மனங் கெட்டு வலைவசால் வந்ததுச தொல்லை
இறைவனு மீசர்க்கு மெல்லை - உன்
இருதய மன்றிக் கோவிலெங்கு மில்லை (சிவ)

(௪௨) மந்திரம் யந்திரத் துளோதி - நாளை
வாளாய்க் கழிக்கின்று யையோ சபோதி
சிந்தையுட் சிவமானச் சோதி - தன்னைத்
தெரிந்துக் கொண் டானந்தங் கொள்வது நீதி; (சிவ)

(௪௩) தனையின்னு னெனக்காட்டிக் கொள்ளார் - பல
சங்கற்ப முண்டாகும் வாக்கியம் விள்ளார்
வினைமாயும் வழிக்கண்டால் தள்ளார் - சருவ
விளைவு மொன்றெனக்கொண்டு எதனையுமெள்ளார் (சி)

(௪௪) ஆகாயத்திற் கோட்டைக்கட்டி - ஆஹா
அழிக்கின்று யுலகெல்லா மகங்கரித் ததட்டி
மோகாதி யங்களைக் கிட்டி - சென்மம்
மூளைகொண்டு விளைந்திடாமற்படிக் குட்டி; (சிவ)

(௪௫) ஆசா பிசாசுக்களாலே - நீ
அங்கிசகுமோடி யலைகின்றதாலே
பாசாங்கு பசப்புகளாலே - சதா
பண்ணுந் தொழில்விட்டு நிற்பதெக் காலே (சிவ)

(௪௬) வேதாந்த சித்தாந்தம் பேசி - உயிர்
வெடுக்கென வோடுதே ஐயையோ சீசீ
சாதனைக் கொள்ளாது மூசிப் - போன
சரக்கென நாற்ற தேகங்கொண்டாய் வீசி; (சிவ)

(௪௭) மானாத பிறவியிஃதாமோ - இதன்
வண்மை யறிந்தால் மரித்திவண் போமோ
ஆனாகாமற்படி யாமோ - உனக்குள்
அபிஷேக நாதனுண்டு கண்டால் சாமோ; (சிவ)

(௪௮) வஞ்சக வில்லை வளைத்து - நாளை
மறலிவந் துயிரதை வெளவக் கிளைத்து
நெஞ்சம் புண்ணாகிக் களைந்து - சென்மம்
நீடிடி லென்பயன் தீமை விளைத்து; (சிவ)

(௪௯) மாய்கையென் றுரைப்பார்கள் தம்பி - அவர்
மனம்வந்து வுசவார்கள் காட்டுவார்க் கம்பி
ஓய்ந்திடி லழுவார்கள் வெம்பி - இவர்க
ளுலகத்திற் பிறந்தென்ன பயனிலா கம்பி; (சிவ)

(௫௰) நல்லவர்க் கிந்திரேச்சானம் - அது
நம்பனு மீசர்க்கா மெனல் பிரதானம்
பொல்லாதான் பேசும்வாய் ஞானம் - என்றும்
போக்கு சுத்திப்போட்ட கதைதரு மீனம்; (சிவ)

(௫௧) தன்ம வாரிதியெனும் பேரு - உன்னைச்
சார்ந்தா லதற்கு நிகருண்டோ பாரு
சன்ம கன்மமெனும் வேரு - தன்னைத்
தானழிக்கு மிதற்கு பதில்சொல்வோ ரியாரு; (சிவ)

(௫௨) வெண்ணீறப் பூசவும் வேண்டும் - கடவுள்
விரும்பிடுஞ் செயலுடன் குணமது வேண்டும்
கண்மணிப் பூணவும் வேண்டும் - சைவக்
கருத்தைப்போல் தானாகிக் கலந்திடல் வேண்டும்; (சிவ)

(௫௩) உண்ணாமை லுண்பார்கள் மூத்சர் - தன்னை
ஒருவரு மறியாமல் வசிப்பார்கட் சித்தர்
எண்ணங்க ளொழியவே புத்தர் - சதா
யேத்துவர்ப் போற்றுவ ரிருதய சுத்தர் (சிவ)

(௫௪) பிறவாத மருந்தனைக் கற்று - இன்பம்
பெற்று ரசைத் தின்று மாய்மலக்கற்று
துறவாமற் றுறக்குநே ருற்று - சன்மத்
தொந்தங்க ணீங்கினு ரேச்சுபேச் சற்று; (சிவ)

(௫௫) இச்சை யொழிந்தாற் சமாதி - என்னு
மிடம்வயப் படுமங்கே வுண்டுசிற் சோதி
உச்சிமேற் கண்டுண்மை யோதி - சதா
ஓம் என்ற பிரணவத்தோ டொடுங்கலே நீதி; (சிவ)

(௪௬) எண்ணமெலா மொழிய வேணும் - அப்போது
இறைவனு நீயுமுள்ள வீடு காணும்
அண்ணலோ டுறவர்கத் தோணும - பிர்ம
ஆனந்தங் கொண்டிட்டால் கன்மங்கள் நாணும்; (சிவ)

(௪௭) சும்மா விருப்பதே ஆட்சி - வந்துத்
தோன்றினு லங்குண்டு அளவில்லாக் காட்சி
பொம்மைப்போ லசையாத சூட்சி - தன்னைப்
பொருந்திடி லதற்குண்டோ நிகரான மாட்சி; (சிவ)

(௪௮) வாணிபஞ் செய்தாலுஞ் செய்வர் - உலகை
மன்னனு யரசாண்டு நிலைதனை வுய்வர்
காணியாய் முத்தியைச் செய்வர் - ஞானக்
கண்பெற்று மாயைக்குட் பட்டோரை வைவர்; (சிவ)

(௪௯) இல்லறத் திருந்தாலு மிருப்பார் - வரும்
இடுக்கணால் சலியாது யாவையும் பொறுப்பார்
மல்லாடு மறலியை வெறுப்பார் - சைவ
மார்க்கத் திருப்பணி வுணர்ந்தியூழ் மறுப்பார்; (சிவ)

(௫௰) நன்னெறி தனில்மனதை விட்டு - சைவ
நயமுற்று மாயையின் வலியதைச் சுட்டு
சொன்னெறி தனக்குவுட் பட்டு - ஞானச்
சுழுச்சியிற் றூங்கினர்க் கேதுலகச் சொட்டு; (சிவ)

(௫௧) தவறாமற் செய்பவன் பூசை - ஈசன்
றனக்கு மவனுக்கு முண்டதிக ஆசை
அவதான மதுகோடி வீசை - பிருந்
தாலு மப்பப்பா விடாமாயப் பாசை; (சிவ)

(௫௨) காய கர்ப்பங்களைத் தேடி - அவைக்
கைவராப்படி மறைந்தார்க் கோடாக்கோடி
மாயச் செயல்களை நாடி - நாளை
மாற்றுணல் வதையாம லருண்வழிக் கூடி (சிவ)

(௫௩) சித்தத்துட் சிவமொருமித்து - உன்னுள்
திருநடஞ் செய்கின்றதே பலசித்து
பத்தியமிழ்தைப் புசித்து - தேகம்
பாழாகா மற்படி காண்பாயோ சத்து; (சிவ)

(௬௪) சாதியுஞ் சமயமுஞ் சொல்லி – கழுத்தில்
தழுக்கை மாட்டிக்கொண் டடிப்பாய் ஜகஜல்லி
நீதியுணராமூட வில்லி - யென
நிலைத்தாயே கதைபடித் தொழிகின்ற பல்லி; (சிவ)

(௬௫) புன்புலா லென்புச் சரீரம் - தன்னைப்
போர்த்துக்கொண் டையோநீ பேசுமா தீரம்
என்புமே லுள்ளவூன் சாரம் - உன்னு
ளிருந்துக் கொழுக்கவைத்தாய் மண்ணுக்குபாரம் (சிவ)

(௬௬) மானிட சன்மமே அரிது – இதனுண்
மறைந்தாட்டுஞ் சீவனுஞ் சிவமோமாப் பெரிது
ஊனிழந்தா னிற்ற லரிது - இதன்
உளவறிந்தார்க் கல்லால் மற்றோர்க்கு சிறிது; (சிவ)

(௬௭) மனம்போன மார்க்கத்திற் சென்று – சைவ
மகத்துவ மறியாமல் வாதாடி வென்று
தினந்தினம் பவவழி நின்று - கொன்றுத்
தின்று யிறந்தனை ஆ கா கா நன்று; (சிவ)

(௬௮) சன்யாசிக்கும் பணம் வேண்டும் – பிரம
சாரிக்குந் திருப்பணி செயவவைத் தூண்டும்
அன்புசெய் இடம் பொருளியாண்டும் – எவ
லதுமுடிந் திடின்பூர்வக் கன்மங்கள் தாண்டும்; (சிவ)

(௬௯) மூப்புச் சுண்ணங்களை முடிப்பார் – தானம்
முப்பாலைக் காய்ச்சி முறைகொண் டடிப்பார்
செப்பரும் வழலையைப் படிப்பார் - மாற்றுத்
தேர்ந்ததாய் மகிழ்வார்ப் பின்னேமாயைப் பிடிப்பார் ()

(௭௰) கொடியக் குணங்கொண்டு வீம்பு - செய்து
குலத்தைக் கெடுக்கின்றக் கோடரிக் காம்பு
தடியடி படச்சாகும் பாம்பு - போல
சண்டன் வரபயந்துத் துணையின்றித் தேம்பு; (சிவ)

(௭௧) பிறந்தாரும் பறந்தாரு மெங்கே – மாயம்
பேசிப்பிதற்றித் திரிந்தாரு மெங்கே
சிறந்தாருந் துறந்தாரு மெங்கே - சீவன்
சிவமன்றி தவஞ்செய்து நின்றாரு மெங்கே; (சிவ)

(எ௨) கோடானு கோடிகள் வேதம் - வந்து
கூத்தாடி மனதைக் கெடுக்கின்ற பேதம்
தேடாமற் றேடுமருட் போதம் - குரு
சித்திக்க வானந்தந் தருகும்பிர சாதம்; (சிவ)

(எ௩) சத்துரு மித்துரு வொன்றே - இவைத்
தன்னையல்லா திருப்பது வழியின்றே
சத்தசத் துணர்ந்திடி னன்றே - என்றுஞ்
சாகா மருந்துண்டு சர்க்குணக் குன்றே; (சிவ)

(எ௪) பொல்லாதச் செயல்கொண்டு வந்து - சந்து
பொங்கெலா நுழைந்தழியுதே விந்துகந்து
வல்லாண்மைப் பேசியே நொந்து - உயிரை
வாளாய்க் கெடுக்கின்ற போதெவர் பந்து; (சிவ)

(எ௫) முப்போகம் விளைவிக்கும் ஆறு - தன்னில்
மூழ்கின வரிலெவ ரெழுந்தனர்க்கூறு
செப்பினு லில்லைக் கைமாறு-உண்மைத்
தெரியாரைக் கடித்திடப் பாம்புண்டு சீறுப்; (சிவ)

(எ௬) பொய்யென்று கடத்தைச் சொல்லாதே - உன்
புத்திப் போனவழி கெடுத்துச் செல்லாதே
மெய்யது முன்பொய் நில்லாதே - ஞான
மேலாம் அறிவினை மாயை வெல்லாதே; (சிவ)

(எஎ) ஓடிவோடி வுழைக்காதே - உடலை
யோம்பி பாவத்தி லோங்கிப் பிழைக்காதே
வாடி மலர்போல் தழைக்காதே - மனம்
மாறி யெமனைவலிய அழைக்காதே; (சிவ)

(எஅ) நல்லோர்க டனைப்பழிக்காதே - சாபம்
நமன்போலக் கொல்லும்போது விழிக்காதே
நில்லாச் செயலிற் செழிக்காதே - சன்மம்
நிலைபெறும் வழிவிட்டையோ அழிக்காதே; (சிவ)

(எகூ) ஆலய மென்பது சிந்தை - இதை
யறியாம லூரூரா யலைகின்ற விந்தை
கோலங்கொள்வானெனதுத் தந்தை - அன்புக்
கொண்டா லுறவாடுவோ னேடும் நிந்தை; (சிவ)

(௮௰) ஆசா பாசங்களைப் போடு - உன்னை
ஐயனுக் காளாக்கி கவிமாலைச் சூடு
பேசா மௌன நிலையை நாடு – ஞான்றும்
பேரின்பங் கொண்டு வானந்தக் கூத்தாடு; (சிவ)

(௮௧) கொண்டு வந்தாயேமண் கோட்டை – இதிற்
குடிகொண்டு விளையாடு மைவர்கட் சேட்டை
பண்டைநோய்க் கிலக்கானக் கேட்டை - செய்து
பறக்குதே நில்லாமலே சுடுக்காட்டை; (சிவ)

(௮௨) இருக்கு நிலையை விடாதே - ஆசை
யேற்படு மதனாலே பின்னாற் கெடாதே
பெருக்கச்செய் திழிவைத் தொடாதே – நீ
பேசு நெறிவிட்டா லஃதோ? அடாதே; (சிவ)

(௮௩) மதியினாற் றுதிசெய்து வாழ்வாய் – உன்
மனங்கெட்டா லையையோ யாவுக்குந் தாழ்வாய்
சதிகார மரணத்துள் வீழ்வாய் - பல
சன்மமுங் கன்மமு மொழியாமற் சூழ்வாய்; (சிவ)

(௮௪) ஒன்றேனு முனக்கில்லை சொந்தம் - ஊருக்
குழைப்பதி லென்னென்ன வுண்டு நிர்ப்பந்தம்
நன்றுதீ தென்னுமுக் கந்தம் - உன்னை
நசிக்கச்செய்திட வுண்டாகுதே மலபந்தம் (சிவ)

(௮௫) பூதம்போற் பொருளைக் கார்த்தாயே - ஒழிந்துப்
போனு லுடலுயி ருடனே வேர்த்தாயே
சாதனைப் பலவும் பார்த்தாயே - மன
சங்கற்பத்தால் வினை தன்னை சேர்த்தாயே; (சிவ)

(௮௬) தெளிந்தவன் வெளியினிற் சொல்லான் – மாயச்
செயலென்பதை மனம் வருந்தினுங் கல்லான்
களியாட லுடையவன் நில்லான் – ஞானக்
கண்ணுடை யானதை விட்டெங்குஞ் செல்லான்; (சிவ)

(௮௭) உண்பது முறங்கலும் வேலை - என
உணர்ந்துழைத் தவன்முடிவிற் கிளப்புவரன் காலை
அண்ணல் வாழ்ந்திடு மௌனச் சாலை - தன்னை
யடுத்தவர்க்கல்லோ வுண்டு தெய்வச்சோலை; (சிவ)

(அஅ) நாதப் பூவதனாலே - மணம்
நாளுங் கொள்ளுமெனு மனுபவத்தாலே
பூரண ஞானத்தினாலே - உயிர்ப்
போகாது நிலைநிற்கும் புண்ணியத்தாலே; (சிவ)

(அகூ) தண்ணீர்மே லெழுத்தென்பர் காயம் - இவைச்
சாற்றி மறைவதா லென்ன சகாயம்
புண்ணியஞ் செய்யுமு பாயம் - கற்றப்
புனித னாலன்றி வுண்டு வாதாயம்; (சிவ)

(கூ௰) சத்தியஞ் சாந்தமிருந்து - உன்னுள்
தாண்டவ மாடுஞ் சிவத்துட் பொருந்து
சத்தியின் பாலையருந்து - என்றுஞ்
சாகா திருக்க துதித்து வருந்து; (சிவ)

(கூக) தானே யசையுமோ ஆடி - காற்றுத்
தன்னாலே யாமென்று வுண்மையை நாடி
வானேறு மீனைப்போலோடி - உன்னுள்
வாழும் பிர்மானந்த னுறவதைக்கூடில்; (சிவ)

(கூஉ) அடியார்முன் றிருத்தொண்டு செய்தார் - தெய்வ
அருளாலே பிறவியின் றலைதனைக் கொய்தார்
பொடிபூசார் களைக்கண்டால் வைதார் - மார்க்கப்
புறங்கூறுவோர் நாவை யரிந்தவ ணெய்தார்; (சிவ)

(கூங) ஒற்றுமை யில்லாதக் கூட்டம் - ஐயோ
ஒழிந்தோடிப் போகு மதுபொம்ம லாட்டம்
கற்றதைப் பேசும்வாய் நீட்டம் உண்மைக்
கல்லார்க்கு மாயை யென்றென்றுங் கொண்டாட்டம்;

(கூச) ஒழியாத பத்திய மிருந்தாய் - கொழுத்த
வுடலாக்கி நரிநாய்க்கு வைத்தனை விருந்தாய்
அழியுமே யெனச்சற்றும் வருந்தாய் - குரு
ஆசீரைப் பெற்றுநீ வாழ்கத் திருந்தாய்; (சிவ)

(கூரு) அனை தந்தை குருதெய்வம் நான்கு - இவைக
ளருட்பெற்று விளங்குதல் மக்கட்குப் பாங்கு
வினைவரும் வழிவிட்டு நீங்கு - ஞான
விமல னுளந்தங்க நலம்பெற்றுத் தாங்கு; (சிவ)

(௯௬) நம்பின வர்க்கென்றும் பாக்கியம் - மெய்ஞ்
ஞானத்தின் முடிவாந் தத்வமசி வாக்கியம்
சம்பிரம முடன்சர்வ ஸ்லாக்கியம் - வாய்ந்துத்
தானாகித் தானாத மிடமல்லோ மோக்கியம்; (சிவ)

(௯௭) சர்க்குண மில்லாதார்க் கூட்டம் - அவர்க்கு
சாக்காடு வரையுமுண்டு முகவாட்டம்
துர்க்குணத் தோர்க்குவாய் நீட்டம் - உண்மைச்
சொல்லுவார் மீதென்று மவர்க்குப் போராட்டம்; (சிவ)

(௯௮) ஆடலும் பாடலுந் தொல்லை - அதனால்
ஐவரும் மனப்பேய மடங்குவ தில்லை
நாடாம னாடிடு மெல்லை - கண்டு
நாட்டமுற்றே குந்தியிரு நிகரொன்றில்லை; (சிவ)

(௯௯) பொருளைச்சந் தருளைச் சம்பாதி - எல்லாப்
புண்ணியங்களையுந் தருகும் விபூதி
மருளாளர்க் குளபல சாதி - முடிவில்
வாய்ச்சொ லின்றி மண்ணில் மறைதலெங்நீதி; (சிவ)

(௱) சோதியுட் சோதியாய் விட்டால் - பலத்
தொந்தத்தை பந்தத்தை அருளினாற் சுட்டால்
ஆதியின் கன்மங் கைவிட்டால் - மஹா
ஆனந்த மானந்தஞ் சிவத்துட்குட் பட்டால்; (சிவ)

(௱௧) ஆயிரத் தெட்டுள்ள மாற்று - தங்கம்
அபராஞ்சிதங் கனகமெனச் சாற்றும்
மாயிரு ஞாலத்துட் போற்றும் - காசி
மஹாலிங்க மவைகளென்றே சதா போற்றும்; (சிவ)

(௱௨) தேனருந்திய வண்டு போல - திசைத்
தெரியாது மயங்கி விழுந்தநேர் சால
ஞானப்பா லதையுண்ட மேலோர் - இவண்
நாடேற் கென்னுண்டு ஆநந்த மூலம் (சிவ)

(௱௩) உண்ண லுடுத்தலே வேலை - பக்தி
உதவாதென்று மூட னுறங்குவான் மூலை
கண்கண்டமாயப் பெண்பாலை - குடித்து
களிப்படைந்தான் வந்த தெமனிட மோலை; (சிவ)

(௯௪) பொன்னுக்கோர்ப் பொட்டிட லாமோ - வீ
பூதிக்கு மேலொன்றைப் போற்றிட லாமோ
மின்மினிப் புழு கிராமோ - சர்வமாய்
விளங்குஞ் சந்திரனுக்கு முனநிற்கப் போமோ; (சிவ)

(௯௫) பொன்னுடைந் தாற் பொன்தானாகும் - அதைப்
போலவே மண்ணுடைந்தாலும் மண்ணாகும்
என்புடைந் தாற் கூடா தாகும் - நீ
ஈசனோடொன்றித்தாற் கன்மங்கட் சாகும்; (சிவ)

(௯௬) சூர்யன் சந்திரனிரு கண்ணே - இந்த
சூட்சமறிந்து நடு நெருப்பாறு நண்ணே
சார்ந்தன முக்கண்ணனென் றெண்ணே - மூன்றாற்
சதாசிவன் செய்தொழிலார் துதி பண்ணே; (சிவ)

(௯௭) வேற்றுமை பேசுவோன் பாவி - பொருள்
வேண்டியே பலபல யுக்திகண் மேவி
காற்றுப் போகுதையோ கூவி - செய்தக்
கன்மங்க ளெல்லாம் பயன்றரா சாவி; (சிவ)

(௯௮) ஆசானை மதியாதான் துரோகி - அவன்
ஆயிரங் காலத்து மாறாத ரோகி
பேசா மோனமுற்றோன் யோகி - ஞான
பிர்ம வானந்தங் கொள்வானே மாபோகி; (சிவ)

(௯௯) சைவ மென்பது தன்னைக் காட்டும் - மார்க்கத்
தன்மையி னிற்போன் சைவனென நாட்டும்
மெய்யோர்ந்து சிவத்துடன் கூட்டும் - கூடிய
வேளையே சமயம் அருட்பாலை யூட்டும்; (சிவ)

(௱) சிவபூசைத் தனிற் கரடி விட்டான் - அறிவால்
தெளிந்தவன் வினைப்பேயைப் பொடி தூவி சுட்டான்
தவசி தவநிலைக்குட் பட்டான் - பூர்வ
தன்மமில்லாப் பாவி யப்போதே - கெட்டான்; (சிவ)

(௱௧) நானென்ற கர்வம் அடாதே - தந்த்ர
நரிப்பயல் மோச வார்த்தைக்குட் படாதே
ஊனென்ற சடத்தை யெடாதே - கன்ம
ஆத்தைக் குழியில் விதையை நடாதே; (சிவ)

(௱௰௨) சத்திய நாட்டில் வசிக்கும் - தன்மைச்
சார்ந்தால் குண்டலிதரு மமுதம் புசிக்கும்
தித்திக்குந் திகட்டாது ருசிக்கும் - வினைச்
சேர்ந்தாலு மதன்றலை யுடனே நசிக்கும்; (சிவ)

(௱௰௩) வேடவின் கைப்பட்ட மானும் - வலைஞன்
வீசிய வலையினி லகப்பட்ட மீனும்
பாடதைக் கொண்டலை வூனும் - படும்
பரிதாபம் போக்கிட வரும்ஞான பானு (சிவ)

(௱௰௪) தேவர்கள் வாழ்வது மலையே - பதினெண்
சித்தர் சீவமுத்தருக்கு மந்நிலையே
பாவமில்லாதது சிலையே - உண்மைச்
பார்க்க வேண்டி லுண்டு பன்னிரு கலையே; (சிவ)

(௱௰௫) தனியே யிருப்பதற்கு மிஷ்டம் - மகா
சமத்கார குணமொடுங்குதல் மிக கஷ்டம்
அனியாயச் செயல்களால் நஷ்டம் - மாயை
அகற்றுதல் முடியாது சொன்னேனிஸ் பஷ்டம்; (சிவ)

(௱௰௬) சொந்தமெதுவரையி லிருக்கும் - முடிவாய்ச்
சுடலைக்குப் பின்வந்து யெவையுனை நெருக்கும்
பந்தம் பிடித்தநெய் யுருக்கும் - ஞானப்
பாலருந்தின முமூட்சு களுக்கில்லை வருக்கம்; (சிவ)

(௱௰௭) காணுஞ் சிவத்தை யுன்னுட் கண்டு - அந்தக்
கரணத்தை வயமாக்கி செய்திருத் தொண்டு
வேணும் ஆனந்தநிலைக் கொண்டு - உன்றுள்
விளையாடும் விமலனுடன் நீயும் அண்டு; (சிவ)

(௱௰௮) ஞானிக்கு யேனிந்த வுலகம் - அஞ்
ஞானிக்குச் சொன்னால் செய்வான் பெருங் கலசம்
ஊனுக்கு சீவனற்றிலகம் - ஓதி
உள்ளுணர்ந் தவர்கட் கிதுவெகு சுலபம்; (சிவ)

(௱௰௯) வித்தின்றி யெவ்வுயிர்ப் பிறக்கும் - அது
விளைந்திடுந் துணையின்றி யெங்ஙனஞ் சிறக்கும்
பத்திமலிந்துள்ளந் துறக்கும் - முன்னம்
பழகிய வாசனை யப்போதே மறக்கும்; (சிவ)

(௱௨௰) பாடைமேற் போகும்நாள் வருகும் - கண்ணூற்
பார்த்தவர்க் கெல்லாம் பரிதாபந் தருகும்
சாடை செய்ததாற் கன்மம் பெருகும் - அவைத்
தானீங்கவே யன நினைத்தென்ற முருகும்; (சிவ)

(௱௨௧) பாஷாணம் பணமென்றுச் சொல்வார் - அந்தப்
பணத்தைதக் கொண்டே யெல்லாஞ் செய்தவர்வெல்வார்
வேஷாண்டி யாகவுஞ் செல்வார் - இதன்
விபரத்தைச் கண்டெவ ருண்மையைச் சொல்வார் (சி)

(௱௨௨) சும்மாயிருப்பது யெப்போ - உன்னைச்
சூழ்ந்துள. மாயைகளொழியும்போ தப்போ
அம்மாயைக் கிதுமனம் வைப்போ - கன்மம்
அகன்றப்பி னினிப்பது வெறுப்பினல் கைப்போ (சிவ)

(௱௨௩) தேகத்து ளுளதெலாம் ஊனே - இதைத்
ஸ்திரமாக்கிக் காப்பதற் குண்டப்பா மூளை
மோகங்கொண் டெழும்பவான் காளை - இவனுக்கு
மூத்திக் கொடுத்திடுமோ நதென்னம்பாளை; (சிவ)

(௱௨௪) சித்துகட் பலசெய்ய லாகும் - தனது
சிந்தையை யடக்குத லரிசரிதாகும்
வித்துகட் கிடைத்திட வாகும - வந்த
விதியைப்போ லதுவழைத்தே வோடிப்போகும்; (சிவ)

(௱௨௫) பொன் வெள்ளிச் செய்வே னென்பார்கள்-அதிலோர்ப்
பொடிதந்து மூவேளை சலிக்கத் தின்பார்கள்
மன்னுஞ் சாதக மூண்டென்பார்கள் - கண்டோர்
மயங்கும படிக்கான மாயஞ் செய்வார்கள்; (சிவ)

(௱௨௬) அருமை யறியாதான் நேசம் - அது
ஆயிரங் கால மிருந்தாலும் மோசம
இருவினை யென்பதே பாசம் - இவைவந்
தெதிர்க்காப் படிசெய் செய்வவுபவாசம்; (சிவ)

(௱௨௭) ஞானபிமான மியாருக்கு - உலக
மாய்கையிற் சிக்கி மலைக்கும் பேருக்கு
தானு யுதித்த வேருக்கு - வெந்நீர்
தான்விட்டாற் பிழைக்கா தனுபவத்தார்க்கு; (சிவ)

(௱௨௮) கண்ணினால் வெளிதன்னைப் பார்த்தாய் - உன்பால்
கலந்துள்ள குடும்பத்தை தினம்பாது காத்தாய்
மண்ணுக்குள் மறைந்திட வேர்த்தாய் - உன்
மனம்போன வழிச்சென்று ஞாசைகள் தீர்த்தாய்; (சிவ)

(௱௨௯) உன்னைநீ பார்த்திடுங் காலம் - வந்து
உறவானால் நில்லாது பூர்வமாய் மாலம்
சின்மயா னந்தனின் கோலம் - கண்டு
தெரிசித்தா லதுதானே தவத்தனுகூலம்; (சிவ)

(௱௩௰) உள்ளதை நீவொளிக்காதே - உன்
உடல்கொழுக் கத்தின் றையோ களிக்காதே
கள்ளம்பேசிப் பல்லிளிக்காதே - பூர்வக்
கன்மமாஞ் சேற்றிலே தினங்குளிக்காதே; (சிவ)

(௱௩௧) வஞ்சனைப் பேசுவோன் கேடன் - வீண்
வாதுக்கு நிற்பவன் மூடரில் மூடன்
விஞ்சையைக் கைக்கொள்வான் சீடன் - மாய
விதையை யழித்தாசாள்வோன் நன்னுடன்; (சிவ)

(௱௩௨) உன்னைநீ யாராய்ந்தாற் றெரியும் - சர்வ
முனக்குள்ளே வொடுங்கின லகண்டமாய் விரியும்
சின்மயமா யருட்புரியும் - பிர்ம
சேவித ஞானலஞ் செழுத்து முச்சரியும்; (சிவ)

(௱௩௩) பெருஞ்சமுத் திரஞ்சமு சாரம் - பெண்பால்
பிணைப்பட்டப் பினீங்க யார்க்குண்டு தீரம்
இருட்கிணற்றில் விழுந்தோன் வீரம் - தனக்கு
எவ்வண முதவாதோ அதற்குமேல் பாரம்; (சிவ)

(௱௩௪) துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் - நற்
றுணையாவா னில்லறத்தா னிறந்தார்க்கும்
சிறந்தவ னாவா னியாவர்க்கும் - சுத்த
சித்தமுங் கற்புடை மங்கையா ளர்க்கும்; (சிவ)

(௱௩௫) இல்வாழ்வா னெழினடைக் கற்றால் - தயாள
மீகை சர்க்குணதவ மடக்கமு முற்றால்
நல்லற வாசிரமம் பெற்றால் - பரம
நாதனோ டொருமித்து மேலுல குற்றால்; (சிவ)

(௱௩௬) உலகமோ மாயவிலாசம் - இவை
யொழியவே தினமுஞ்செய் பக்தி விஸ்வாசம்
தலந்தீர்த்த மூர்த்தத்துள் வாசம் - ஈசன்
தானென் றுரைக்குநூற் படிபோகும் பாசம்; (சிவ)

(௱௩௭) ஐய்ந்தாய்ந்து பார்த்திட்ட போதும் - உள்ள
தப்பப்பா வுனைவிட்டுப் போகாதோர் போதும்
தேய்ப்பிறை யாகினப்போதும் - ஒளியைத்
தேடினால் கிடைப்பது அரிதெனும் வேதம்; (சிவ)

(௱௩௮) ஓதி யுணர்ந்ததன் படியே - நடக்கு
மொழுக்கத்தி னிற்பவ னவன்கலை முடியே
சாதிச்சொ லென்பது மிடியே - நல்லோர்
தனக்குமு னிற்காது வோடிடுநொடியே; (சிவ)

(௱௩௯) ஆசிரமம் நான்கென மொழிந்தார் - உழைக்கி
லவைக்கவை நன்குதந் திடிலெவ ரொழிந்தார்
மாசுற்ற மனத்தவ ரழிந்தார் - அன்பு
மாறினவர்த் துன்ப சனனத்தா லிழிந்தார்; (சிவ)

(௱௪0) சுகபோக மெதுவரை வருகும் - பலத்
தொந்தங்க ளானதுத் துணையாகப் பெருகும்
இகபர சாதனந் தருகும் - தன்மை
யிழந்திடு நாளதிலே நெஞ்சமுருகும்; (சிவ)

(௱௪௧) தன்னைத்தான் மறப்பதே தவமாம் - சிவந்
தானகன்றப் போதே சத்தற்ற சவமாம்
தன்மங்க ளென்பதே பவமாம் - இதைக்
கைவிட்டு மௌனியா யாவது நவமாம்; (சிவ)

(௱௪௨) அழகிலாச் செயலிற் றடித்தாய் - நல்லோ
ரறிந்து சொன்னாலையோ எதிர்த்து துடித்தாய்
பழவினைப் படிநீயு முடித்தாய் - பணம்
பாஷாண மென்று யவைக்கே நடித்தாய்; (சிவ)

(௱௪௩) மனப்பாம்பை பிடித்துள்ளே ஆட்டு - கன்மம்
வரும்வாயி லதையடைத்துத் தாளைப்பூட்டு
கினைவுற்று வாசியை மூட்டு - ஞான
நிரதி சயானந்த போகத்தை நாட்டு; (சிவ)

(௱௪௪) மண்ணுக்கு ளொளிக்காதே அப்பா - உன்
மாயங்க டனையறிவே னியானுஞ் சுப்பா
உண்ணுக்கு ளூர்ந்திடு மப்பா - எடுத்த
வுடலுயிர்ப் பிழைத்திட வகைதேடு தப்பா; (சிவ)

(௱௪௫) கணபண கங்கண ஆரம் - பூண்டு
கருத்துளே கர்த்தனைக் கண்டு ஆசாரம்
குணங்கொண்டுட் கலந்திடும் நேரம் - கைக்
கூடினா லதற்குமே லேதுபகாரம்; (சிவ)

(௱௪௬) தொம்பதந் தன்னையே சார்ந்து - அதிற்
றெய்தப் பதங்கண்டு வுண்மையிற் றேர்ந்து
அம்புலி யொளிருணர்வு நேர்ந்து - ஞான
வானந்தந் தன்னி லயர்ந்தன்புக் கூர்ந்து; (சிவ)

(௱௪௭) சரிகம பதநிசந்தானே - கண்டு
தாம்தரி கிடவெனுந் தாமாகு வானே
திரிவித வுலகினு மியானே - தங்கி
திருவிளை யாடற்செய் சிவகுருதானே; (சிவ)

(௱௪௮) அம்பல முனக்குள்ளே தோணும் - அதில்
அம்மையு மப்பனுஞ் செய்நடங் காணும்
சம்பூர்ண வானந்தம் பூணும் - ஞானந்
தானானப் போழ்துத் தானாகவே வேணும்; (சிவ)

(௱௪௯) மோன தரிசனங் கொள்ளு - வினை
மூடிடி னப்போதே அப்புறந் தள்ளு
ஞானாதி காரியாய் விள்ளு - நன்மை
நாடாக் குணத்தரைக் கண்டால்நீ யெள்ளு; (சிவ)

(௱௫௰) சருவமு முனக்குள்ளே தோற்றும் - வழித்
தான்வந் தடைந்திடு முளவதைச் சாற்றும்
கருமங்க ளூறவினை மாற்றும் - மனக்
கண்பெற்று பரமனைக் கலந்துள்ளே போற்றும்; (சிவ)

(௱௫௧) சுரமண்டல தம்பூரு நாதம் - உனக்குள்
தோன்றிடக் கேட்டு மகிழ்ந்திடுங் கீதம்
வரம்பெற்று வாழ்வா யதீதம் - ஈசன்
மலரடி வணங்கினாற் குண்டு நற்போதம்; (சிவ)

(௱௫௨) அங்கிங்கு மோடாது மந்தி - தன்னை
யடக்கிவோ ரிடமது தேடியே குந்தி
துங்கமெய்ஞ் ஞானமுச் சந்தில் - தூங்கித்
தூங்காம னிட்டை சமாதிக்குட் புந்தி; (சிவ)

(௱௫௩) வெட்ட வெளிதன்னிற் கூடு - ஞான
விமலனோ டுறவாகி மகிமைக ளோடு
அட்ட லட்சண மதில்நீடு - தேக
மழியாது நிலைப்பெற் றுனந்தக்கூத் தாடு; (சிவ)

(௱௫௪) தானானே தானானே தானே - சருவந்
தானாகித் தானானல் தானதுத் தானே
வானாதி பூதமுந் தானே - ஒன்றாய்
வயப்பட்டா லானந்தப் பரமும் நீ தானே; (சிவ)

(௱௫௫) தவப்பிர காசத்தி னேரே - கலந்து
தாண்டவம் பார்த்து சுகித்திருப்பாரே
சிவப்பிரகாச தேசிகன் சீரைக் - கண்டு
தெளிந்துக் கொண்டின்பவீ டதில்வாழ்குவாரே; (சி)

வாழி. எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

நாதன் ஓம் ஐங்கரவிநா யகன்றான் வாழி
நவலும்ஸ்ரீ கபாலீசன்கற் பகவல்லித் தாய்
போதமிகுஞ் சண்முகன் வள்ளி தெய்வானை
புனிதகுரு மூர்த்தி நால்வர் வெண்ணீ றக்கம்
சாதனைசூ ழடியர்கள் மெய்ப் பாடும் புலவர்
தன்மையாயிந் நூற்குபொரு டந்த கண்யர்
ஆதரமே லிவைபடித்தோர் கேட்டோர் சீர்சா
லருண்மலி பூரணவாசீரால் வாழிமாதோ.

—— § ——

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்
சிவஞானஸத்வாம்ருதம்
ஸமாப்தம்
திருச்சிற்றம்பலம்.

ஜகநாதபுரம்.
தன்மீகர் தி. வெ. தம்புசாமிபிள்ளை
,, மு, திருக்காமணி பிள்ளை
அ கா. இரங்கசாமி பிள்ளை
மு. சுப்பு பிள்ளை
கோ. கோதண்டசாமி பிள்ளை
ஸ்ரீ ஜெக விநாயக பக்த பஜனை.
உபாத்தியாயர் கோ. தனசிங்கம்பிள்
பிள்ளை மு, பஞ்சாட்சரம்பிள்ளை [ளை
கருக்காத்தம்மன் கோவில் வீதி.
ஸ்ரீ சிவத்யான் பஜனை.
ஸ்தாபகர் வீ.நா. இராகுவேல்பிள்ளை
மூப்பர் கோ, இரங்கசாமி பிள்ளை
டாக்டர் சாமிநாய்க்கன் வீதி.
N. ஆளவந்தார் தாசர் [ளை
செம்மநகர் சி. வெங்கடாசலம் பிள்
,, சி. தாழமலைபிள்ளை
கீழ்ப்பாக்கம் மேட்டுவீதி.
ஸ்ரீ சிவானந்த பக்த பஜனை
ஸ்தாபகர் பொ. ஏ. மதுரை பிள்ளை
மூப்பர் பெ. மு. பாளையம்பிள்ளை
,, ஆ. செ. பொன்னப்ப பிள்ளை
உபாத்தியாயர்
திரு செ. ப. முருகேசம் பிள்ளை
சட்டம்பிள்ளை சம்பிரதி
சோதிடர் செ.ப. சந்திரகாசம்பிள்ளை
காரியதரிசி திருவன்பாக்கம்
காஞ்சிபுரம்- வி சின்ன தம்பிபிள்ளை
ஆலே. சனைத்தலைவர்
செ. நா, இராகுவேல் பிள்ளை
விசாரணைத்தலைவர்
கு. க. முனிசாமி பிள்ளை
திறவுகோலர் வீ. முருகேசம்பிள்ளை
தண்டல் செ. நா. கதிர்வேலுபிள்ளை
பிள்ளைகள் மு. குப்புசாமி பிள்ளை
,, சி ஜெகதீசன் பிள்ளை
கோட்டிமாநகர்.
வீ. முத்துகிருஷ்ணம் பிள்ளை
B. திருசாசலம் பிள்ளை
ஜே. வேணுகோபால் பிள்ளை
கோண்டிமாநகர்.
கி. வீ, செ. தாமோதரம் பிள்ளை
அமைந்தகரை தே. முனிசாமிதாசர்

சேத்துப்பேடு.
ச. மு. சிங்காரவேலு பிள்ளை
ச. நாராயணசாமி பிள்ளை
கி. மா. வே. குழந்தைவேலு பிள்ளை
அ. பொ. சாம்பிள்ளை
மு. இர. பார்த்தசாரதி பிள்ளை
ஸ்ரீ விநாயக பக்த பஜனை
மூப்பர். கு. வீ. சுப்ரமண்யம்பிள்ளை
மேடியூர். செ. அ. தங்கவேலுபிள்ளை
கன்னிமாநகர்.
தன்மீகர். வா. தெ. ஜெகநாதம்பிள்
மு. அப்பாசாமி பிள்ளை [ளை
விஜய. பெ. ஆ. முருகேசம்பிள்ளை
ந. ஜான் திருக்கையா பிள்ளை
வி. சி. அப்பாவு பிள்ளை
ஜோ. அந்தோனி பிள்ளை
V. K. M. சாரங்கபாணிதாசர்
ஏ. மா. சிங்காரவேலு பிள்ளை
C. முனிசாமி பிள்ளை
கி. க. மு. நடேசம் பிள்ளை
M, முருகேசம் பிள்ளை
பொன்னுநகர்
ஸ்ரீ சிவசுப்ரமண்ய தியான பஜனை
கிராமம் வெ.பா. முருகேசம்பிள்ளை
இரா. பொன்னுசாமி பிள்ளை
து. விஜயராகவலு பிள்ளை
அ. குழந்தைவேலு பிள்ளை
த. மு. முனிசாமி பிள்ளை
டாக்டர். மு. வேலு பிள்ளை
ஆற்காடு. மு. மதுரைபிள்ளை [ள்ளை
மேடியூர் அ. பி. ஆரோக்கியசாமி பி
கெண்டி. P. சுப்ரமண்யம் பிள்ளை
இராயவேலூர் C.V ஆறுமுகம்பிள்
நுங்கம்பாக்கம் கிராமவீதி [ளை
பெ. மா. அருணாசலம் பிள்ளை
தெ. ஏகாம்பரம் பிள்ளை
தி. சுந்தரம் பிள்ளை
சாலை தேவனும்பேட்டை
சிவதியானானந்த சித்விலாசபஜனை
ஸ்தாபகர்- அ. சண்முகம் பிள்ளை
வன்னியதேவனும்பேட்டை
பொ. முருகேசப் பண்டிதர்
கோ. ஜ. நாராயணசாமி பிள்ளை

எம் கையொப்பக்காரர்கள் நாமதேயம்.

வேளாளத்தேவனும்பேட்டை.
மு. வே. கோவிந்தராஜலு பிள்ளை
மு. மு. துரைசாமி பிள்ளை
T. தாமோதரம் பிள்ளை [நீலகிரி]
ஆல்தோட்டம். [தர்
சி. ஸ்ரீமுத்துகிருஷ்ணதாச பண்டி
ஸ்ரீசிவகணேசபக்தசமவாயம்
அமிர்தகவி-இர. பொன்னுசாமிபிள்
வீ. வடிவேலுபிள்ளை [ளை
க. தம்பியப்பன் பிள்ளை
மா. இராமசாமி பிள்ளை
ஏ. இராஜகோபால் தாசர்
செ. மாணிக்கம் பிள்ளை
மு. காளி பிள்ளை
து. வாசுதேவ மூர்த்தி
வி. எ. சுப்ரமண்யம்பிள்ளை
பொ. வீரராகவலுபிள்ளை
பொ. மு. நடேசம் பிள்ளை என்கி
பா. சதானந்தம்பிள்ளை [ரேவர்
அ. பொன்னம்பலம் பிள்ளை கன்ட்
சாமுவேல் சகரியா பிள்ளை [ராக்டர்
D. முனிசாமி பிள்ளை
K, முனிசாமி பிள்ளை [ளை
பிருங்காசயிலம்-பா இராகவலு பிள்
ஏந்தூர். ப. முனிசாமிபிள்ளை சப்
இராயப்பேட்டை. [ளையர்
சோதிடர் மு. முத்துசாமிபண்டிதர்
இல. இர. முருகேசம் பிள்ளை
க. ந. வீ. தம்புசாமி பிள்ளை
ஸ்ரீ சிவப்ரகாச பக்தபஜனை
திண்டிவனம் – கொள்ளாறுகிராமம்
ஸ்ரீசிவப்ரகாசசித்திவிநாயகர்
ஆலயம், கல்விச்சாலை, இவையின்
ஸ்தாபகர்-கோ. பூங்காவனம்பிள்ளை
போதகாசிரியரும் காரியதரிசியும்
ஆகிய கணிதநுப்புலவர்
மு. தங்கவேற் பிள்ளை
உபாத்தியாயர் ச. முருகேசம் பிள்
ஆயிரந்தீபநகர்]ளை
ஸ்ரீசிவப்ரகாச லீலாவிநோத
பக்தபஜனை
ஸ்தபகர்- ஆ. அப்புபிள்ளை
R தம்பியப்பன் பிள்ளை

ஆயிரந்தீபநகர். நா. சபாபதிபிள்ளை
" சி. அப்பாசாமி பிள்ளை
S.P. இராவணன் பிள்ளை (கல்கத்தா)
மக்கிமாநகர் த. இர. கணபதிபிள்ளை
" S. P. நடேசன் பிள்ளை
" கோ. வீ. சபாபதிபிள்ளை
அமீர்நகர் க. முருகேசம் பிள்ளை
நாசிம்ஹபுரம்.
ஸ்ரீசிவஞான பக்தஜன சபை,
ஸ்தாபகர் வீ. கோவிந்தசாமியார்
காரியதரிசி பெ. இரத்னசாமிபிள்ளை
பொக்கிஷர் நா. முனிசாமிபிள்ளை
திறவுகோலர் வீ. சுப்ரமண்யசிவம்
சம்பிரதி சி. முனிசாமிபிள்ளை
சிந்தாதரிப்பேட்டை.
திருப்பணி செ. தருமலிங்கம்பிள்ளை
" எ. சி. சண்முகம்பிள்ளை
த. இரங்கசாமி பிள்ளை [பிள்ளை
பாலசங்கீத T. R. தியாகராயம்
V. மதுரைமுத்து பிள்ளை
அ. மு. தங்கவேலு பிள்ளை
மேட்டுவீதி P. சுப்ரமண்யம் பிள்ளை
மவுண்ட்ரோட் ஜெகன்ஸ்வீதி
ஸ்ரீ சிவப்ரகாச சுந்தர ஞான
பக்தாமிர்த பஜனை. [ளை
ஸ்தாபகர் ஏ. மா. தங்கவேலுபிள்
சம்பிரதி வ. பா. வாசுதேவ பிள்ளை
காவேரிப்பாக்கம் பெ. சின்னசாமி
மக்கிமாநகர் ஆற்றூர் [பிள்ளை
ஸ்ரீசிவப்ரகாசசித்திவிநாயக
பக்தபஜனை.
ஸ்தாபகர் வீ. ஐயாக்கண்ணுபிள்ளை
மூப்பர் கோ. வேம்புலி பிள்ளை
" அ. பொன்னரங்கம்பிள்ளை
காரியதரிசி வீ. முருகேசம் பிள்ளை
பொக்கிஷர் வீ வேலாயிதம் பிள்ளை
தண்டல் இரா. பொன்னுசாமி பிள்
பிள்ளைகள் கா. காளிபிள்ளை [ளை
" சி. பெருமாள் பிள்ளை
" பூ. நடேசம் பிள்ளை
" ம. சின்னையன் பிள்ளை
" ஸ்ரீநிவாசம் பிள்ளை
" மு. குப்புசாமி பிள்ளை

எழூர் கார்டன்கிளப்
கேண்டி- அ. முனிசாமி பிள்ளை
எழூர்-சு. செ. மாணிக்கம்பிள்ளை
" அ. பொன்னரங்கம் பிள்ளை
கங்கைமாநகர் க. ஆறுமுகம்பிள்ளை
சாணுங்குப்பம்
கிராமம் ச. திருவேங்கடம் பிள்ளை
அ. முத்துகுப்புசாமி பிள்ளை
கி. ச. அ. ஏகாம்பரம் பிள்ளை
சு. சிங்காரம் பிள்ளை
காட்டுக்கோவில் மு. சீராளன் பிள்ளை
துயப்பேட்டை வீரா பெருமாள்வீதி
உபாத்தியாயர் மு. முருகேசம் பிள்ளை
Mechanical Gt.
அடையாறு கிராமவீதி
ஸ்ரீ சித்திகணேச பக்தபஜனை
ஸ்தாபகர் சி. முருகேசம் பிள்ளை
ஸ்ரீ வேத விநோத விநாயகபஜனை
ஸ்தாபகர் ந. குப்புசாமி பிள்ளை
மூப்பர் இர முருகேசம் பிள்ளை
பிள்ளைகள் வே. கி. வரதராஜலுபிள்ளை
" இர. ஆறுமுகம் பிள்ளை
" ம. மதுரை பிள்ளை
அடையாறு வ. வ. சிங்காரம் பிள்ளை
" வே. சண்முகம் பிள்ளை
" ம. உலகநாதம் பிள்ளை
மேட்டுவீதி இர. ஏகாம்பரம் பிள்ளை
நாராயணசாமிதோட்டம்
ஸ்ரீ விநாயகமஹோத்ஸவசபை
மூப்பர் வீ. இரங்கசாமி பிள்ளை
" கொ. முனிசாமி பிள்ளை
ஸ்ரீ சிவகணேச தியானபஜனை
அங்கம் து. துரைசாமி பிள்ளை
பைக்கிராப்வீதி P. சின்னசாமிபிள்ளை
ஸ்ரீ வல்லாளகணபதி பக்த பஜனை
ஸ்தாபகர் ஆ. வ. இரத்நசாமி பிள்ளை
காரியதரிசி உ. கந்தசாமிபிள்ளை
ஊநூர் ஸ்ரீ சர்வசித்தி விநாயகர்
ஆலயம் ஸ்ரீமத் –
மா முருகேசதம்பிரான்சுவாமிகள்
ஊநூர். M. கோவிந்தராஜலுபிள்ளை
" மா. கபாலமூர்த்தி
அகரம். ந. எல்லப்பமூர்த்தி

திருமயிலைமேட்டு வீதி
ஸ்ரீ சிவகணேசபக்தபஜனை
ஸ்தாபகர் பொ. கந்தசாமி பிள்ளை
இராபர்ட்ஸன்பேட்டை.
ந. முருகேசம்பிள்ளை
கொன்றைமாநகர்
மயிலை வே. பொன்னுசாமி பிள்ளை
" வீ. கு. இலிங்கராஜ் (கல்கத்தா)
வாலாஜாபேட்டை
அ. அண்ணாமலைதேசிகர் (கன்ட்ராக்டர்
திருவிளக்கேணி
நெட்டால் வார்விக் அவனியு
ஸ்ரீ சித்தி விநாயக சிவசாதன தவ
சைவசங்கத்தின் ஸ்தாபகர்
புரசை-C. V. பாலகிருஷ்ணம் பிள்ளை
" C. V. பாபு பிள்ளை
நரியமாநகர் மு. ஆறுமுகம் பிள்ளை
" K. M. தேவசகாயம் பிள்ளை
புதுப்பேட்டை
தமிழ்ப் பண்டிதரும்,
சங்கீத வித்வானுமாகிய
சி. இஷ்டலிங்க முபாத்தியாயர்
பாலகவி. ந. முருகேசம்பிள்ளை
D. டேவிட்பிள்ளை
பெரியமேட்டு கோவில் தர்மகர்
பஜனை மூப்பர் ஐ. வடிவேலுபிள்ளை
மு. பொன்னுசாமிபிள்ளை (கல்கத்தா
மஞ்சை திரு R. S, வரதராஜலுபிள்ளை
ஏழுகிணற்றுவீதி வைதிலம்பேட்டை
ஏ. கதிர்வேலு பிள்ளை
மண்ணடி சவரிமுத்துவீதி
திருப்போரூர் வள்ளீவசத்திரத்தின்
தலைவர் வீ. முக்குந்து பிள்ளை
செ. அருணசலம் பிள்ளை
இராயபுரம் கயிற்றுகிடங்கு
இந்துபக்தபால்ய சபை
கொ. சி பாலசுந்தரம் பிள்ளை
க. வே. அருச்சுனம் பிள்ளை
பெரியூர் பு. வே. சாரங்கபாணி பிள்ளை
இராயபுரம் நாகவல்லியம்மன் வீதி
ஸ்ரீ ஷட்சித்திவிநாயகர்பஜனை
ஸ்தாபகர் கோ. தி. அப்பு பிள்ளை
மூப்பர் மு. பெ. முருகேசம்பிள்ளை

காசிமேடு
ஸ்ரீ சின்மயானந்த பஜனை
மூப்பர் இரா. சுப்ரமண்யம் பிள்ளை
அ. மா. வைதியலிங்கம் பிள்ளை
புளியந்தோப்பு
க. சின்னமதுரை பிள்ளை
துலுக்கன்தோட்டம்
அ. அமுர்தவாசகம் பிள்ளை
சின்னமலை க. முனிசாமிபிள்ளை
கேண்டி பொன்னப்பமேஸ்திரி
பிருங்காசயிலம்
S. N. வடிவேலு பிள்ளை
கிராமம் ஐயாசமி பிள்ளை
P. இரகுபதி பிள்ளை
கு. வடிவேலு பிள்ளை
செ. மு. கைலாசம் பிள்ளை
சமாசரத்நாகரம்
C. K. மங்களேஸ்வரம் பிள்ளை
திருப்புழலை ஸ்ரீசிவத்யான பஜனை
ஸ்தாபகர் பெ. தெ. சா. முனிசாமி பிள்ளை
உபாத்தியாயர்
கொ. மு. பழனிசாமி பிள்ளை
பூவைசின்னமாங்காடு
ஸ்ரீசிவத்யான்பக்தபஜனை
தலைவர் ச. இரங்கசாமி பிள்ளை
செங்கற்பேடு இலக்கண வித்வான்
முதுவரங்கதாசர்க்குமாரர்
முது. வேலுமயில் பிள்ளை
செங்கற்பேடு தெ. முருகேசம்பிள்ளை
காஞ்சிபுரம்திருவான்பாக்கம்
சொ. நடேசம் பிள்ளை
இராணிப்பேட்டை மாணவர்வீதி
R. R. காகரத்தின நாயனுர்
R. R. மோகனசாமி நாயனுர்
கோலார் மாரிதுப்மம்
கியாதை P. செல்லப்பாகம்ப்பேனி
ஆம்பூர் கிருஷ்ணபுரம்
வெ. மு. வடிவேலு முதலியார்
V. C. கோபால் பிள்ளை
கீழ்வீதி இராஜாபிர் தூர்
நெல்லானெனும் கோபால்பிள்ளை
பாளையமேஸ்திரி
சின்னதம்பியெனும் மஹாதேவபிள்ளை

ஷை செல்லப்பா கம்ப்பேனி
வியாசர்பாடி
M. துரைசாமிபிள்ளை
V. C. இராமசாமி பிள்ளை
ஆதிமூலபண்டாரம்
உளியனூர் பெருமாள்தாசர்
D. ஆசிர்வாதம் பிள்ளை
அப்துல் முனுசாஹிபு
T. ஆதிமூலம் பிள்ளை பொன்னுநகர்
உரிகம்கிளப்
P. சபாபதி பிள்ளை
உரிகம் கன்ட்ராக்டர்
பெங்களூர் K. V. சித்திரைபிள்ளை
தண்ணூர் ஜெனரல்சப்ளையர்
கிராமம் S. குழந்தைவேலு பிள்ளை
பண்டிதர் R. நாராயணசாமிபிள்ளை
நீலகிரி
இந்து ஆரியமத சித்தாந்த சபை
மூப்பர் பா. சுந்தரம் பிள்ளை
(மானேஜர்சில்க்ஹோட்டல்)
K. M. பாலகுமரு பிள்ளை
சூப்ரேன்டேன்ட் ஸ்னேடன்
B. S. ஜெகநாதம் பிள்ளை
ப்ளவர்காட்டேஜ்
நீத்தி A. திம்மப்பன் பிள்ளை
நீலகிரி R. வேலாயுதம் பிள்ளை
(இராயல் கன்பேக்ஷனர்)
Y. ஆறுமுகம்பிள்ளை
நீலகிரிஷாப்கீப்பர்
G. R. ஜேம்ஸ்பிள்ளை
காந்தல் V. I. முனிசாமி பிள்ளை
காந்தல் V. M ஆண்டியப்பபிள்ளை
காப்கிளப்
காந்தல் S. ஜான்முனிசாமி பிள்ளை
பஸ்மாதூர்
மு. பெ. ஏகாம்பரம் பிள்ளை
நீலகிரி வண்டிசோலை
ஸ்ரீ ராமாநுஜ பஜனை
ஸ்தாபகர் A. சாரங்கபாணிபிள்ளை
ஜவுளி. முருகேசம் பிள்ளை
B. S. குருநாதம் பிள்ளை
சென்னை சேத்துப்பேடு
M. V. கிருஷ்ணசாமி பிள்ளை